நாளுக்குநாளங்கு — மிங்குந் - சற்றும்
நாதாந்தவேதாந்த நாதனைப் — போற்றி (இரக்கத்)

(கூ0) இன்றைக்கிருப்பதும் — பொய்யே - இனி
இன்றைக்கிருப்பது மெய்யென்பதையே
என்றுமிருப்பது — மெய்யே - என
எண்ணியெண்ணியரு ளுண்மையைப்போற்றி (இரக்கத்)

(கூக) பார்க்கப்பலவித — மாயும் - ஆகற்
பல்லாயிரங்கோடியண்டம — தாயும்
காக்கு நிலைக்குயி — ராயும் - நின்ற
காரணப்பூரணநாதனைப் — போற்றி (இரக்கத்)

(கூஉ) கரும்புசர்க்கரைக்கற்கண் — டாலே - பாகவ
காய்ச்சியெடுத்துத்திரட்டிய — பாலே
அரும்பாவிக்கருதுங்கை — யாலே அனாத
தாட்கொளுநாயகன் றாள்களைப் போற்றி (இரக்கத்)

(கூஙு) கற்பங்களுண்கிறே — மென்றே - வெறி
சந்நாசங்கள்ளு மயிலியுந் — தின்றே
துப்புக்கெட்டலையாம — லின்றேன் அருள்
தூயமெய்ஞ்ஞானக் கடலினைப் போற்றி (இரக்கத்)

(கூச) கருவிதழிதனி — லோடி - யானுங்
காலுகளோய்ந்தும்விடாமலே — தேடி
அருவிக்கயர்ந்துளம் — வாடி - அலை
யாமலெனக்கருள் வாமனைப் — போற்றி (இரக்கத்)

(கூரு) நாசினுனியிலை - — நின்று - நல்ல
நடனமபுரிவனது க்கமீர — சொன்று
வாசியிலேறிக்கொண் [illegible] — டின்று - காண
வைகுந்தகுருபரன் [illegible] னைப் — போற்றி (இரக்கத்)

(கூசா) தேடியபொருள்பூமிய — போரும் - இந்த
தேசங்கராஜாங்கமாண்டிருப் — போரும
ஈடெனக்கில்லையென் — போரும் - செத்
திறப்போரென்றேமனை நினைப்ப் போற்றி (இரக்கத்)

(௧௭) ஆனைகுதிரைக ளொட்டை - ரதம்
ஆசைபோடேறுமுடலொட லொட்டை
ஞானமிலாதகண் பொட்டை - என்ற
நாதன்றருவறிவித்ததை போற்றி (இரக்கத்)

(௧௮) அரசனரண்மனைக் கோட்டை - கூத்
தம்பாசகடைமை புரிகின்ற பாட்டை
இரவும்பகன்மலர் சோட்டை - வைத்த
இம்பர்குணிகுருநாயகருள போற்றி (இரக்கத்)

ஆனந்தக்களிப்பு முற்றிற்று-ஆகபாடல் ௨௮௪.

—0—

நிராமயக் கண்ணி.

—:※:—

ஆதிமறைதலே பகுண்டபரிபூரணமென்
றோதுங்குணங்குடிகொண் டோனே நிராமயமே. ௧

தேசிகனெனன்றே திருநடனம்மாடுகின்ற
வாசாமகோசரமே வாழிநிராமயமே. ௨

சுத்ததிருவடியில சொக்கியருள்பெறுமன்
செத்திறந்துபோனதிலென் செயலேநிராமயமே. ௩

கண்ணேமணியேயென் கண்ணிறைந்தகாரணமே
விண்ணேமெய்யருள்ஞான வெளியே நிராமயமே. ௪

எப்ரவிதமென் னிதயம்தெளிவாக
அப்தவினையகலப் பாராய நிராமயமே. ௫

இறந்தான்முதலகதி னென்பரிபானென்பதெல்லாந்
துறந்தானேயந்நிலையே சொல்வாய்நிராமயமே. ௬

வற்றுச்சமுத்திரமே வள்ளலிலவான்பொருளே
சித்தருளத்திற் றெளிவே நிராமயமே. ௭

உம்பர்குமெட்டாதென் றோதுமருந்தேபோலமிட்ட
செம்பொற்கிரிசே தெய்வமே நிராமயமே. ௮

பேச்சுக்கடங்காத பேரின்பத்தேனருந்திக்
காச்சிவடித்த கடலே நிராமயமே. ௯

ஆநந்தத்தினுள்ளேநின் றாடுதிருக்கூத்தனை
சிந்தையறிகிலனென் செயலே நிராமயமே. ௧௦

மஸ்தான்சாகிபு அவர்கள்பாடல்.

மோனமௌனமணி மூடிவைத்தபெட்டகமே
தேனமுதவின்பத் தெளிவேநிராமயமே. கக

மண்பட்டநெஞ்ச மயக்கமெலாந்தீரவருள்
பண்பட்டார்க்கல்லோ பயன்காணிராமயமே. கஉ

மனவாக்கணுகா மறைந்தவான்செஞ்சுடரே
இனமதியாயற்ற விறையேநிராமயமே. கந

பார்க்குமிடமெல்லாம் பரிபூரணமாக
ஏற்றையுடநின்ற வியல்பேநிராமயமே. கச

விண்ணுமுதல்மண்ணும் விளங்குகின்றமெய்ச்சுடரே
கண்ணேயென்னின்பக் கடலேநிராமயமே. கரு

துன்புறுமென்னெஞ்சத் துயரமெல்லாந்தீர்க்கவெனக்
கன்புறுவாய்நின்ற வருளேநிராமயமே. கசு

அங்கிங்கெனவொண்ணா வகண்டபரிபூரணமாய
எங்குநிறைந்த விறையேநிராமயமே. கஎ

நாட்டுமிருவினையை நாட்டாருனகருளின்
றேட்டாளரொன்ற நிரமேநிராமயமே. கஅ

படர்ந்தமனக்குடியாப் பக்குவர்பாசாடவியைத்
தொடர்ந்துகொடாநதுவெட்டத் துணிவார்நிராமயமே. ககூ

உத்தமர்கட்காகா வலுத்தப்புலையொன்றும
பித்தாநெறியுளரோ பேசாய்நிராமயமே. உ௰

பாவபுண்ணியத்தைப் பறக்கவிட்டபத்தர்தமக்
கேவல்புகலவில்லை யென்றாய்நிராமயமே. உக

முத்திதருமவேத மொழிந்தவழிநடக்கப்
பெற்றகுருவென பிணைகாணிராமயமே. உஉ

ஊத்தைப்பிணமா முடனயிடிசுவை
ஏற்றபடிவிடுத வீனநிராமயமே. உந

ம்மழிந்தது ஒருபாசர்விட்டெரிந்து
நெஞ்சதணியேநெறி நிற்பார்நிராமயமே. உச

சொரதங்கடந்தே சுழுமுனையினல்லாலென்
புந்திமயக்கம்விட்டுப் போமோநிராமயமே. உரு

வாராகருணைமழை வந்துபொழிந்தாலொழியத்
திராமலமயக்கந் தீரோநிராமயமே. உசு

பாயுமபசுபாச மடியுமுடிவுற்று
டாயனையவின்பந் தருவாய்நிராமயமே. உஎ

ஐயனேயென்னை யணைத்தாட்கொண்டாளவந்த
மெய்யானோரத வெளியேநிராமயமே. உஅ

உருவத்தைக்குணங் குடிபோமன்பருக்கு
யாளாகிகரிடுவ தையாபிராமயமே. ௧௯

பித்தம்பிடித்தலையும் பேய்குரங்குபோற்கரணம்
புத்திதனையுலக்கைப் போமோபிராமயமே. ௨௦

தஞ்சமெனுஞானத் தடாகமுழுகுவர்க்கு
விஞ்சியிராத விளக்கேபிராமயமே. ௨௧

ஆரிருந்தென்னார்போயென் னாவிக்குருந்துணையாம்
பேறுபெறச்செய்தாற் பிழைபபோபிராமயமே. ௨௨

போகாக்கவலைப புழுக்கமெலாந்திருதற்கு
வாகாயருள்புரிய வாராயபிராமயமே. ௨௩

காமக்கடல்கடக்க கர்த்தவியக்கப்பல்வைத்தால்
நேமநிஷ்டைகம்பம் நிலைகாணிராமயமே. ௨௪

நின்னைச்சரண்புகுந்தா னிராமூடமாகவெனை
யென்னத்துக்காட்கொண்ட நியமபாய்பிராமயமே. ௨௫

சிந்தையறிவைச் சிதையவிட்டுனருள்பெறவே
வந்தெதற்கென்றிருககருணை வைப்பாய்பிராமயமே. ௨௬

தேனமுதேபாகு திரண்டபெருங்கடலே
வானவாகுமெட்டா மணியேபிராமயமே. ௨௭

இந்தவிதய பிணங்கிமணங்கவருட்
டந்தடிக்காட்கொண்ட தானுபிராமயமே. ௨௮

இடம்பொருளேவ லெலவையுமறந்தகுணங்
குடியார்க்குவமைக் குறியேபிராமபமே. ௨௯

ஆழாழிதானு மணைகடவாகானைதனிற
ழுழிவிலையோவென் ருபேபிராமயமே. ௩௦

நீதுாலமறியேன் றிசைநாகமெற்றவையும்
நதென்றறியே னெளியேபிராமபமே. ௩௧

மீளாவெளியில் விழற்கிரைத்தநீரெனவும்
பாழிலலைவதுமென் பாவம்பிராமயமே. ௩௨

ஈன்றெடுத்தமாதா வெனையாட்கொண்டாள்வதென
ஆண்டணைப்பதென்றோ வருளாபிராமயமே. ௩௩

சாத்திரங்களோதுஞ் சழக்கர்தமக்குமருள்
மாத்திரைப்போதேனும் வருமோபிராமயமே. ௩௪

அய்யனேமெய்யருளி லாசையற்றநீசனுக்கும்
உய்யுந்திருக்கருணை யுண்டோபிராமயமே. ௩௫

காதாருங்கண்ணீராற் கறைபுறளநின்றவர்க்குச்
சூதுதருங்கண்ணீரென் றுரைகையுமபிராமயமே. ௩௬

வஞ்சகக்குடியிருந்து வாழுமாதநிலாருக்
கெஞ்சாதிருக்கு மிருப்பேநிராமயமே. ௪௭

பற்றற்று நின்ற பரமபதந்தனிலருக
கெட்டுத்தொழிலுஞ்செய்ய விருப்பேநிராமயமே. ௪௮

வாதையகண்டருணங் குடிவாழுவைத்தாயே
நாதப்பெருமையுளதென்றுநிராமயமே. ௪௯

என்றுமிருப்போமென் றெண்ணியெண்ணியென்னிதயஞ்
சண்டைபிடிக்கச் சரியேநிராமயமே. ௫௰

மட்டுக்கடங்க மயக்கமெல்லாந்தீர்த்துவெளிப்
பட்டோர்கட்கெல்லாம் பயனானாய்நிராமயமே. ௫௧

மன்னுமுயிரகரு மறைவிருந்தபொழுதில்
உன்னையன்றியாந்தா முளரோநிராமயமே. ௫௨

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணியிடைந்துமனம
புண்ணுவதறகோ புகுந்தேநிராமயமே. ௫௩

உள்ளதுரியதெல்லா மொழியாதுணைத்தவெனைத்
தள்ளிவிடத்தான் றகுமோநிராமயமே. ௫௪

தன்னாதிருக்கருணை தாழுந்திருவடிக்கே
வன்னத்தைச்செய்வே னெனியேநிராமயமே. ௫௫

கற்றறிவுடக்கக் கல்லாதபாவியெனைச
சித்தந்தெளியவருள் செய்வாய்நிராமயமே. ௫௬

பேச்சற்றுஞ்சிந்தை பிறகுகிணையுமற்றபதம்
வாச்சாக்கல்லோமௌனம் வாய்க்குநிராமயமே. ௫௭

நிஷ்டையிருவிகற்ப மிருந்தனைக்கொண்டேயிருக்க
அஷ்டாங்கயோகமெனக் கருளாய்நிராமயமே. ௫௮

தொல்லுலகிலல்லற் றுயரமெல்லாந்தீர்க்கவொரு
சொல்லருளாய்வந்த துணையேநிராமயமே. ௫௯

உயிர்த்துணைவனோனு முளந்தெளியாயுழுத்தனையோர்
மயிர்க்குறிகாகுறிக்க மாட்டேனிராமயமே. ௬௰

கொல்லாதவிரதந்தனைக் கொள்ளக்கொலைஞருள்ளக்
கல்லாகத்தானு கணித்தாய்நிராமயமே. ௬௧

எத்தனையோவுத்தி யெடுத்தெடுத்துச்செய்யுமுடல்
உற்றாரிருக்க வுடையுநிராமயமே. ௬௨

வாயேபுலம்பி வருபாசம்பேய்பிடித்த
தீயனெனச்சொன்னாலென் செய்வேநிராமயமே. ௬௩

தாயிருக்கப்பிள்ளை தளராதிதாருபோது
நீயிருக்கநான்றளர நேரோநிராமயமே. ௬௪

சொல்லுக்கடங்காச் சுகங்காட்டுறவிகட்கு
நல்லறிவுசற்றே நல்குங்காநிராமயமே. ௬௫

மத்திபத்தினூடே மறைந்தமணிவிளக்காக
நித்தம்விளங்கவரு வேணராய்நிராமயமே. ௬௬

மெத்தப்படித்த வெறும்பாசப்பிடித்தருக்கே
சித்தந்தெளியாதென் செய்கைநிராமயமே. ௬௭

கள்ளவிருளைக் கடிந்துகறைபோக்குதற்கும்
தெள்ளியவாய்சோதித திரளேநிராமயமே. ௬௮

ஓட்டாதேஉன்னைவிட்டு மோட்டிருப்பிடரில
மாட்டாரோயான்பொருக்க மாட்டேநிராமயமே. ௬௯

தன்னையறிந்தாற் றலைவன்றனையறிந்த
தென்னுமொழியே யிருக்காணிராமயமே. ௭௰

அபயமென்னைக்காப்ப தண்ணலேயுனதுபய
முபயமுபயமுன்ன துபயநிராமயமே. ௭௧

பிரியாமுனதடியைப் பின்றொடர்ந்தாற்பின்றொடரா
அறியாச்சிறியனென் னையாநிராமயமே. ௭௨

தூகுணமேகொண்ட தொழும்பணிபாவதொல்லுலகிற்
றூற்குணதத்தால்போலுங காணேநிராமயமே. ௭௩

பொய்யுங்கவடுமுள்ளே பூட்டிவைத்தபெட்டகமாய்
தையுமுடலெடுத்தே னான்காணிராமயமே. ௭௪

கங்குல்பகலொழிந்த காரணர்க்கோதின்னருளைப்
பங்குகொடுத்தாய் பதராய்நிராமயமே. ௭௫

தேருப்பிரபஞ்சத் திடுககமெலலாந்தீர்ந்துவுற்கு
மாறுவருநிலைதான் வாய்க்குநிராமயமே. ௭௬

சருவதயாளியாய்ச் சஞ்சரித்துநெஞ்சினாகருப
பிணியர்வருணிலைதான் பெறுபநிராமயமே. ௭௭

பாதமுடிநடுவும் பக்கமுன்னும்பின்னுமற
நாதவடிவே நவமேநிராமயமே. ௭௮

பேசாவிடமறிந்தும பேபக்குரங்குபோற்கருவி
ஊசாடுவதே னுரையாய்நிராமயமே. ௭௯

எனையாட்கொண்டாள்வரு மென்குருநாதவ்வரவுக
தனையார்க்குஞ்சொல்லத் தகுமோநிராமயமே. ௮௰

கொப்புவித்தினுள்ளே குடியிருந்தகொள்கையென
எப்பொருட்குஞ்சித்தா யிருந்தாயநிராமயமே. ௮௧

கூறுங்கருவி குடிபோனவன்பருகவே
பாரும்நிகரோவென் னையாநிராமயமே. ௮௨

சிந்தைசிதையாச் சிவராஜயோகநிலை
வந்தோர்க்கருள்புரிய வந்தாய்நிராமயமே. அ௩

கோடானுகோடிபறை கூறவறியாதவனைத்
தேடுகின்றதென்னோவென் றிரமோநிராமயமே. அ௪

பிரியாவருணிலையைப் பெற்றாபெற்றரெனவு
மறியாவெறியனையா வையர்நிராமயமே. அ௫

எமனார்விடுதூ தெனும்பாசக்கட்டறுததோர்
நமனாதமக்கு நமனாநிராமயமே. அ௬

துலங்குமருண்மையத் தோன்றநிருண்மயமாம்
புலனைதலைப்பாயுனக்குப் புண்ணியம்நிராமயமே. அ௭

மன்னிக்கவொண்ணா மனக்குறையுந்தாய்பொறுப்பாள்
நின்னருகருளுமந்த நேராய்நிராமயமே. அ௮

எந்தவறிவை யெடுத்தெடுத்தேயோதினுமென்
புந்திமயக்கனுவும் போகாநிராமயமே. அ௯

செகத்துமயக்கஞ் சிதறிப்பறக்கவுமென்
றகைப்பறவோர்முத்தந் தருவாயநிராமயமே. கூ0

உய்க்கதுணர்வதெல்லா முயிர்க்குயிர்நீதானெனவுஞ்
சித்தந்தெளிந்தோர் சிறங்காணிராமயமே. கூக

அனைத்துயிருநீயென் றறிந்தாரமாப்புமுதல்
நினைகருமாறெங்கே னிகழ்த்தாய்நிராமயமே. கூஉ

நின்செயல்களென்று னினைப்புமறப்புமுத
லென்செயல்களுண்டோ வியம்பாய்நிராமயமே. கூ௩

எறும்பூராலூர விரும்புமுதற்றேய்வதுபோல்
இறும்பூறுமன்பருள்மித் தகையேநிராமயமே. கூ௪

கும்பிக்கிரைதேடிக் கொடுத்தார்முகம்பார்த்திதயஞ்
சந்திப்பிரியந் தகுமோநிராமயமே. கூ௫

கூடலின்மடைகண்டதெனக் கண்ணீர்கிரைபுரளும்
அடியன்முகம்பார்த்திரங்கி யருளாய்நிராமயமே. கூ௬

பருவமதுசெய்யப் படர்பயிராம்பக்குவர்க்குக
கருவாமருணிலையே கணிகாணிராமயமே. கூ௭

நினைப்புமுதிப்புமெலா னின்செயலாலென்றன்பருளந்
தினைப்பேர்தீம்விட்டுத் திரும்பார்நிராமயமே. கூ௮

சிவராஜயோகந் தெளிந்ததிறத்தினருக்
கெவரைச்சரியிடுவ தெந்தாய்நிராமயமே. கூ௯

அந்திபகலற்ற வகண்டபரிபூரணற்கே
சிந்தைநிறைந்த தெளிவேநிராமயமே. ௱

வேதங்களாலும் வெளிப்படாச்சுந்தரமாஞ்
சோதியெனக்கென்றே துலகைகுமிராமயமே (ஈஉ)

எப்பொருளுந்தானா யியக்குமுனைப்பூசைசெய்ய
புட்பமெடுக்கவுந்தன் போமோகிராமயமே (ஈஙு)

மைபொருளைததேடிக கடலோடிப்போவரென
மெய்ப்பொருளைததேடி மெலிந்தேனிராமயமே (ஈச)

உயிர்க்குளுயிராயென் னுள்ளுள்ளுலாவியநீ
தயிர்க்குளுறுவெண்ணெயெனத் தானேயிராமயமே (ஈரு)

மூடமுனிவரிடையா மூக்குநுனிககட்கிடைகளி
மூரமுதிருநடனத த ஈட்டமிராமயமே (ஈசா)

நீளுங்கரணமுத லனைகுருகிமகிமனர்ககுத்
தாழாவருணிலைபைத் தந்தாயிராமயமே (ஈஎ)

கொல்லுதற்குவந்த கொலைஞரொலப்பாவிமனை
மல்லுப்பொருவதறவேன் வைத்தாயிராமயமே (ஈஅ)

பல்லுயிருமபோற்றும பரமபதத்திலைமகுர
சொலலுஞ்செயலுாக தொலையுமிராமயமே (ஈகூ)

தன்னையறிந்தாற றனக்கொருகேடிலலையெனச்
சொன்னமொழியே சுகமகாணிராமயமே (ஈகூ)

புண்ணுபக்கசிந்துமனமை பூணுகின்றவன்பருககுக
கண்ணாகளைபுரளக கணடாயிராமயமே (ஈய)

மூன்னூற்சுறுதி முறையாலெனையறித
னின்னையறிதற் குளவாமிராமயமே (ஈயக)

அண்டபகிரண்ட மகண்டபரிபூரணமாயக
கொண்டநின்னையாரறிநது கொண்டாரிராமயமே (ஈயஉ)

உன்னையன்றிவேறொன் றுளதோவுண்டாகிலதை
இன்னதுவாமென்றே யியம்பாயிராமயமே (ஈயங)

நெஞ்சததில்வஞ்ச நெகிழாககட்டுணடவருக
கஞ்சமெனனநீயென் றறிபாயிராமயமே (ஈயச)

துக்கவலையற்ற துரியாதீதத்தினாக்கு
நற்கவலைதானே வாடிகுகுமிராமயமே (ஈயரு)

விண்ணோடுமண்ணுமுதல் வேணதெலாமுன்கருணைக
கண்ணூடிடைகிடகக கண்டேனிராமயமே (ஈயசா)

நாய்கனுவிருந்தோ நரிக்கோபுழுக்கூடு
தீய்க்குவிழக்கா தெரியேனிராமயமே (ஈயஎ)

ஈக்கிரும்பூமுத லெல்லாதுவாமெனனுடல்
செய்க்கடகைகூடபெறு பேறேயிராமயமே (ஈயஅ)

விண்ணூறியாயும் விளங்குவதுநீயெனவென்
கண்ணூறவுங்கனவு கண்டேனிராமயமே (௱௰௯)

இல்லாமையில்லா தென்றிதயந்தெளிவதற்கென்
வல்லாண்மைகொண்டு வருமோநிராமயமே (௱௨௰)

உன்னையன்றியாவு முளவோவென்றோதியபின்
என்னையெனத்தில்லைத் திசைப்பாய்நிராமயமே (௱௨௰௧)

கானற்சலமாங் கவிபாசக்கட்டுண்பார்
தானுனையெனத் தகுமோநிராமயமே (௱௨௰௨)

காட்டிக்கொலைவேடன் கைக்குட்சிக்குமானனைய
மாட்டித்துயருறவு மாட்டேனிராமயமே (௱௨௰௩)

கல்லுமுருகுமொரு காலத்திலுமென்னிதயம்
அல்லலுறுவதில்லை ஐயாநிராமயமே (௱௨௰௪)

காயக்கருவி கரணமுதற்காயவைத்த
சேயநுளத்தி னிறைவேநிராமயமே (௱௨௰௫)

பல்லாயிரங்கோடி பகிரண்டமுமவையும்
எல்லாமுனதடிக்கா னென்றாய்நிராமயமே (௱௨௰௬)

எனக்கோர்நிகருமில்லை யில்லாரில்லவ்லாரில்
உனக்கோர்நிகரொருவ நுண்டோநிராமயமே (௱௨௰௭)

செயலுஞ்செயுஞ்செயலுஞ் சிந்தித்தவஞ்சித்தம்
எப்போதெனைவிட் டியங்குநிராமயமே (௱௨௰௮)

நீராற்றிரள்குமிழி நேயவுடையும்முடலம்
பாராகக்கைகொடுத்த தையாநிராமயமே (௱௨௰௯)

ஒன்றாய்ப்பலவா யுருவருவாயும்முயிராய
நின்றவனையாரறிய நன்றாய்நிராமயமே (௱௩௰)

பெற்றெடுத்தமாதா பிதாக்களிருந்தாலுமெனை
செத்தவுடமைமண்ணிற் றிணிப்பார்நிராமயமே (௱௩௰௧)

எந்தமுயிர்க்கே யெமனுய்க்கும்பாசப்
பந்தமகலமுகம் பாராய்நிராமயமே (௱௩௰௨)

அபயமெனைக்காப்ப தண்ணலேவுங்கடமை
உபயமினியொருவர்க் குண்டோநிராமயமே (௱௩௰௩)

எம்மையுனதடிக்கீழ் இசைத்தாட்கொண்டானாக
விண்ணுமேமேயண்ணி மேலங்கேநிராமயமே (௱௩௰௪)

நிர்மலத்தையற்ற நவநாதசித்தர்தமைக
கர்மகாண்டபுராணக காணேனிராமயமே (௱௩௰௫)

தேங்காய்க்கிளநீர் செழிப்பபற்றிச்சித்தாய
பாங்காயருளுவதும் பாராய்நிராமயமே (௱௩௰௬)

கல்லைநிலைவின்பங் கனிந்தொழுகுமுன்னடிக்கேன்
றன்றாலுமென்பலன் றுயேநிராமயமே (௩௰௭)

அமையாமனமைந்தே யருட்கடிமைப்பட்டவரை
எமனாலுமெய்செயலா மென்றாய்நிராமயமே (௩௰௮)

ஒன்றுக்குமெட்டா துறைந்தசுபஞ்சாதியுட
ரண்டர்க்குமெட்டாதென் றறிந்தேநிராமயமே (௩௰௯)

வஞ்சமின்றியென்னை வழிப்படுத்திவைக்கவுனை
பஞ்சலானனடைந்தே னையாநிராமயமே (௪௰)

தாயனையவின்பத் தருபேரின்பக்கடலில்
வாடமடுக்கிற்றாகம் வருமோநிராமயமே (௪௰௧)

முன்னோளமைகிருந்த மூதறிவினோர்வசனஞ்
சொன்னலதுவே சுகங்காணிராமயமே (௪௰௨)

அட்டதிக்குமண்விண் ணடங்கும்பெருவெளியில்
நட்டநாவிருந்த நாதநிராமயமே (௪௰௩)

இதுநலமுதலாஞ் செய்கையகலவத்தால்
ஈதொன்றும்போதுமெனக் கெந்தாய்நிராமயமே (௪௰௪)

கொப்பகத்திலென்னைக் கிடத்தியமுதூட்டுமுனக்
கொப்புவனமயாவொன் றுமையபேர்ராமயமே (௪௰௫)

எவ்வுலகுமேவற் கிணங்காதோ நின்னருடான்
செயயவிக்கப்பட்டோர்க்குச் செப்பாயநிராமயமே (௪௰௬)

தன்நேசம்விட்டுத் தனித்ததபோதனர்க்குச்
சென்றவழியெல்லாஞ் சிறப்பாநிராமயமே (௪௰௭)

சிந்தைகலக்கஞ் சிதறிவிடச்செய்ததுவே
எந்தத்தவததினுசன் றெந்தாய்நிராமயமே (௪௰௮)

தேடுவதுகாடுவதுன் சிந்தைத்திருநடனை
மாடுவதுமுன்னடியாராக காதைநிராமயமே (௪௰௯)

கண்பகலிரவுங் காணார்க்கன்சூரியனை
ரெனநெழுநாமென்ன விபம்பாய்நிராமயமே, (௫௰)

சத்தவசமென்றுஞ் சின்னஞ்சிறியவொன்றும
முத்தர்க்கிருக்கு முறைகாணிராமயமே, (௫௰௧)

சட்டரசங்களமுதற சாருவில்லங்கசுத்தி
இட்டார்க்குன்றுறைவா தெய்துநிராமயமே, (௫௰௨)

ஆகமத்துக்கெட்டா வகண்டபரிபூரணமாய்
ஏகவெளியென்றே விபம்பாய்நிராமயமே, . (௫௰௩)

தேகமுடையுமெனத் தோந்தமனத்தினர்போற்
பாசபக்குவதநதைப் படையேநிராமயமே, (௫௰௪)

நாழியுமூநாழியும நாழிபாத்தன்மையுமுப்
பாழெப்படியேனாகே பகராய்நிராமயமே (கருரு)

கொத்தோடடிமை குடியாகவென்றனையுன்
பத்தருக்கென்றே படைத்தாய்நிராமயமே, (கருசு)

எந்தவுயிரு மெமதுயிரென்றெண்ணியெண்ணிச்
சிந்தைதெளிவருள் செய்தாய்நிராமயமே. (கருஎ)

அந்திப்பகலற்ற வகண்டிதாகாரமுமென்
புந்திவெளிக்குப் புகுமோநிராமயமே, (கருஅ)

உள்ளுள்ளுயிரா யுறைந்தவனைத்தொழவே
பள்ளியறையெவன் பகராய்நிராமயமே, (கருகூ)

மேவிட்டவாணவந்தை மெய்யவிட்டமேலவர்க்கு
மூலத்தெழுந்த முனையேநிராமயமே, (கசுய)

மூலமுதலாறுதல முட்டிநின்றகுண்டலியின்
பாலிறகதித்தேகப் படுமோநிராமயமே, (கசுக)

பஞ்சசுத்திசெய்த பரவையாரென்னவென்னை
யஞ்சலிசெய்தே யடைந்தேநிராமயமே, (கசுஉ)

தொண்டர்பணிகளாய்ச் சுகப்படுத்திவிட்டுவிடற்
றென்றிரங்குவாய்கருணை யெந்தாய்நிராமயமே, (கசுங)

ஓவியத்தைப்போலே யுறைந்தமனதினனென்
றாவிகருணைதுணையா மையாநிராமயமே, (கசுச)

விரிந்தசபைமுதன் மேவிநின்றமெய்ஞ்ஞானஞ்
சருவமுமாய்க்கண்டெனவுங் கண்டோநிராமயமே, (கசுரு)

அஞ்ஞானம்விட்டே யறந்தாங்கிவந்தவர்க்கு
மெய்ஞ்ஞானந்தானே விளக்காய்நிராமயமே, (கசுசு)

நின்றுமுமதிப்பூண்டு தியலெனப்பாவிமெனச்
சண்டிப்புராளச் சரியோநிராமயமே, (கசுஎ)

எம்மாவிசைந்த வருவினையும்போகவிட்டுச்
சும்மாவிருக்கச் சுகந்தாநிராமயமே, (கசுஅ)

பாசவினையெல்லாம் பறந்திடமெஞ்ஞானவைவாள்
வீசவருடனே விளக்காய்நிராமயமே, (கசுகூ)

தன்னிலிருந்த தலைவன்றனையறியா
தென்னையறிந்தென்னபல னெந்தாய்நிராமயமே, (கஎய)

உன்னைமறப்பிக்க வுருவெடுத்தவாணவப்பேய்
தன்னைமறப்பிக்கத் தகாதோநிராமயமே, (கஎக)

இல்லாதமாயையெனைத் தொடராதவண்ணமொரு
சொல்லருளச்செய்யெம் றுரையேநிராமயமே, (கஎஉ)

துர்க்குணமேகொண்டு தொழும்பனியாசன்றேலுலகிற்
கற்குணத்தனென்போலுங் காணேனிராமயமே; (௧௭௩)

பொல்லாவென்னெஞ்சம் புழுங்கவருசலை
சொல்லுக்கடங்காச் சுகங்காணிராமயமே, (௧௭௪)

அலையுமகத்தை யகத்தடக்குமன்பருளாம்
உலையினிடுமெழுகுக் கொப்பாய்நிராமயமே, (௧௭௫)

எழுகடலுமோர்கிடுகி னிடையிருந்தக்கற்றாலும்
எழுவுமனத்தினர்க்கு வாயேநிராமயமே, (௧௭௬)

போருக்கேவைத்தெதிர்த்த போதத்திற்போலெனிதயம்
தீரம்பேசுவதென்ன செபமேநிராமயமே, (௧௭௭)

சோம்பேறிருள்போற் சுருண்டமனத்தினர்க்குக்
காமவிகாரங் கசப்பாம்நிராமயமே, (௧௭௮)

ஒழியாபிரபஞ்சத் துறவைமறவார்க்குக்
கெளிற்றிற்படுநாரைக் கெதிராநிராமயமே, (௧௭௯)

புந்தியிதமகிதல் பூட்டுவிட்டபோசர்தமக்
கந்திபகலறுமென் னையாநிராமயமே, (௧௮௰)

நானேநெருப்பாறு நடக்குமயிர்ப்பாலமும்யான்
றானேயெனுமறிவைத் தாராயநிராமயமே, (௧௮௧)

மின்னனையபொய்யுடலை மெய்யென்றபொய்யரினி
என்னகதிபெறுவா ரெந்தாய்நிராமயமே, (௧௮௨)

கருவிப்பெருவிளியிற் சருக்கைச்செலுத்தாருக்
கருவிசொற்பவரு ளாங்காநிராமயமே, (௧௮௩)

கேபாப்பஞ்சாக்ஷரவா யட்டுந்திறத்தினர்க்குங்
காயரப்புரிகோட்டை கனங்காணிராமயமே, (௧௮௪)

பூமிப்பரப்பைவளம் போய்வரினும்பாவிகளைக்
காமவினையகலக் காமேநிராமயமே, (௧௮௫)

கோணற்கருப்பரசங் கோணுதுகொள்கையென்றன்
ஆணவத்திலுந்த லறிவாணிராமயமே, (௧௮௬)

கானலைநேர்பொய்யுடலைக் கல்லாகக்கண்டவர்க்கு
நாணுமையினின்றே நடுக்குநிராமயமே, (௧௮௭)

சலக்குமிழிபோன்றவன்றன் சிற்றுடற்குமித்தனைபே
கலக்கத்தைவைத்தாயென் கண்ணேநிராமயமே, (௧௮௮)

பொய்வாழ்வைவேம்பும் புலையர்தமக்குனது
மெய்வாழ்வளிந்து விடுமோநிராமயமே, (௧௮௯)

கனக்குமிருவினையாங் காலடியைத்தூக்குவதற்
கெனக்குமுடியாதினமே லெந்தாய்நிராமயமே, (௧௯௰)

துறவின்றிச்செய்தவினையின் றொகைபலமேனதென்பவர்க்கு
நரகசேர்க்கையென்றே நவின்றாய்நிராமயமே, (௧௯௧)

கரதொடுகண்வாய்மூக்குங் கண்டமெய்யோடையரியும்
வாதாடுதற்கே வார்த்தேநிராமயமே, (௧௯௨)

மாதாபிதாவுந் வருத்திவருந்திவைத்த
போதனையைபார்க்கிற் பிழைகாணிராமயமே, (௧௯௩)

சொல்லுமளவுஞ் செலுத்துகின்றசிந்தையினோர்க்
கல்லும்பகலுமறு மைபாணிராமயமே, (௧௯௪)

வேதச்சமயதனை வீம்புக்கெடுத்தவுடன்
மாதவத்திற்கெங்கே வளையும்நிராமயமே (௧௯௫)

நரம்பென்புதோலா னடிக்கின்றபாவைதனிற்
குருமபமுதலெல்லாங் குடிகாணிராமயமே, (௧௯௬)

தாலத்துவிச்சைத் தொலைத்தேரிஞ்ஞாலமுதல்
ஆலத்துக்கொப்பன் றறைந்தாணிராமயமே, (௧௯௭)

வானேறநூலேணி வைத்தாற்போலுன்னடியால்
நானேறுவேனென்று நாட்டமணிராமயமே, (௧௯௮)

மைந்தர்களைப்பெற்று மறலிக்களித்தபின்
சிந்தைநெருப்பாயெரியச் செய்தாணிராமயமே, (௧௯௯)

நாலுதிக்கினும்விஜய நாட்டுமன்னர்கோட்டையெல்லாம்
பாலர்மணறசோறறின் படியாம்நிராமயமே, (௨௦௦)

பாட்டைப்படித்தாற் பகர்ஞானவானென்ப
நேட்டுச்சுவைககாய்க் கியல்பாமணிராமயமே, (௨௦௧)

நின்னருளன்றி னிறைவுகுறைவென்பாருக்
கென்னகதிமுடிவி லெந்தாய்நிராமயமே, (௨௦௨)

தேகாபிமானத் தினாசடம்தேசிகாக்கு
மோகங்கடேங்கே முபலும்நிராமயமே, (௨௦௩)

சித்தந்தெளிந்த சிவஞானியருலகப்
பித்தரானவைப் பிடியார்நிராமயமே, (௨௦௪)

புத்திதெளியாப் புலத்தோர்தமைத்துவைத்துன்
மத்தமனுஷரான மாட்டேநிராமயமே, (௨௦௫)

தொல்லைப்பெருமல்லற் றொலைத்தாருக்கேயொன்றுஞ்
சொல்லத்தானுண்டோதான் சொல்வாய்நிராமயமே, (௨௦௬)

போக்கும்வரத்துமெல்லாம் பொய்யென்றபுண்ணியர்க்கு
நீக்குமருளுண்டோ னிகழ்த்தாய்நிராமயமே, (௨௦௭)

சத்தனையேயகற்று மிதையந்தெளியாதிருந்த
பித்தருடனேயும் பிழைகாணிராமயமே, (௨௦௮)

வஞ்சப்பிரபஞ்ச மபக்கொழிந்தாலல்லாது
அஞ்சுலெனும்பொருளு லகலேன்பிராமயமே, ()

அண்டமிருவினைப்பே யண்டாதுடிட்பார்க்கு
தொண்டுசெய்வார்க்கன்றோ சுகங்காணபிராமயமே. (உ0ம)

என்னெஞ்சத்தானே பெனைச்செடுக்குமின்னுமெனைச்
சின்னப்படுத்திலென்ன செய்வேபிராமயமே. (உ0மக)

மூடுமெனதறிவே மூடியிருந்தாலும்
ஆடுமறிவெங்கேநின் றாடுபிராமயமே. உகஉ

ஓடியேயுள்ளமட்டு மோமயிரமபங்கி
வாடியேநின்சமுகம் வடேதபிராமயமே. உகங

முட்டாளெனப்பட்ட முழுதுமெனக்கேவுனக்
கிட்டமிருந்தா லியம்பாய்பிராமயமே. உகச

ஆலமுறுந்தூல் மனித்தியமெஸ்பேர்க்காசை
மாலெங்கேநின்று வருங்காணிராமயமே. உகரு

ஆர்ப்புகருபிரான தண்டபகிரண்டமுமாக
தாற்பரியஞ்சொல்லத் தகுமோபிராமயமே. உகசு

எண்டிசையுந்தானே யியங்குமுலைந்தொழுகற்
கண்டசராசரமின் றும்பிராமயமே. உகஎ

காற்றடிபோலக கருத்துவந்துதேடிலுனை
ஆற்றுதயர்ந்தேனென் னையாபிராமயமே. உகஅ

எல்லாம்படித்துநடப் பெய்தினரின்புற்றனர்மற்
றல்லாரையாரொன் றறிவேபிராமயமே. உகக

அந்நீனைசுற்றமெல்லா மகலவிட்டமன்பர்தமக
கின்னலகலுமதேவாகசாம்பிராமயமே. உஉ0

சாருதனீடன்றியில்லைச் சத்தியொடுமென்மனத்தை
ஆராயவேண்டாமென் னரசேபிராமயமே. உஉக

தத்துமனதினர்க்குத் தாபலஞ்போகிறதை
ஏததனைஎன்றோயுரைப்ப தெங்ஙான்பிராமயமே உஉஉ

கொல்லுங்கொலைக்கஞ்சாக் கொலைஞனெனும்பாவிமனத்
தொலலையைத்தீர்க்கச் சுகங்காணபிராமயமே. உஉங

உன்னையன்றியென்னை யொதுங்கிவைப்பதெந்தநெறி
அன்னையன்றிச்செயதா னுண்டாமோனிராமயமே. உஉச

பொங்குங்கடலைப் புறச்சிறுத்தார்கள்ளமன
வங்கமெங்கேயோடி வருங்காணிராமயமே. உஉரு

கலலாதகல்வியெல்லாங் கற்றுமுமறிஞானகலை
எல்லாரக்குமின்பமில்லை யேதோனிராமயமே. உஉசு

பிறக்குஞ்சடரினையும் வேறுவேறெண்ணுருக்
குழக்குளப்புமுப்பெனவு மொன்றுனிராமயமே. உஉஎ
சாசடிதோரைத்துடணிக்குந் தப்பிலிகளேப்புவியில்
ஏன்றுன்படைத்ததுவா னெந்தாய்நிராமயமே. உ௨அ
புத்தியகங்காரம் பூணுமனமிறங்கிற்
சிந்தைமகந்துவந்நதச் சேரும்னிராமயமே. உஉகூ
நானேதிருவடியை நாடுவ நபதேடுவதும்
ஆனலது பெரிதா மையு மனிராமயமே. உ௩0
காற்றுர்ந்ருத்தெரிந்து காணர்புலேங்குச்மேல்
சோறறுமெய்துமகாணனிராமயமே. உ௩க
மன்னுவாக்லைஞான மாரகமறிந்தோர்ககுமுறும்
ஆன்மரியகைபோது மறிபாரநிராமயமே. உ௩உ
சென்னிக்கிசையாச் சிவராஜயோகனிலே
பன்னமலர்பபதததை வைததேனிராமயமே. உ௩௩
சென்மமெடுததாற் செகமாயைவிட்டழிந்து
நன்மைபெருத னயங்காணிராமயமே. உ௩௪
பாசமறவார் பரமபதக்தினர்போற்
பேசிலாகூடவும்நான் பேசேனிராமயமே. உ௩௫
நேர்ப்வழிகாட்டி னிச்சயத்தைச்சொல்லெனைக்
காருன்னையன்றி யரசேனிராமயமே. உ௩௬
வாசகத்திஞானமெல்லாம் வந்ததுபோற்பேசினயோ
மோசப்படவு முறையோனிராமயமே. உ௩எ
பெட்டினிறையப் பெருக்கிவைத்தபெட்டகத்தாற்
குட்டிச்சுவரென்றே குறித்தானிராமயமே. உ௩அ
மனம்பாசமற்றுனிற்க வாயாலுனைப்புகழும்
இனங்கள்முழுதுமெனக் கெதிர்காணிராமயமே. உ௩கூ
வாசனையைப்போக்கும் வரமுண்டென்னொருசொல்
நேசருக்குமுண்டோ னிகழ்ததாய்னிராமயமே. உ௪0
அன்னைபிதாவு மணைந்தஞற்றவாக்கினைக்கா
என்னைப்பிறககவைத்தா யெந்தாய்னிராமயமே. உ௪க
மாதாபிதாவும் மயறீர்ந்தவாற்றுனக்கு
வாதோயெனைப்பிறகக வைத்தாய்னிராமயமே. உ௪உ
பின்னையொருவர்செய்யும் பிழைக்குப்பரிகாரம்
யென்னைத்தெருவில்விட்ட தேன்காணிராமயமே. உ௪௩
தொண்டரைகொண்டோர் துயிலார்முகத்தணைக்க
கண்டுயிலாரண்டனெனக் கண்டாய்னிராமயமே. உ௪௪

ஈனத்துக்கேற்றவுடலென்னதென்னதென்பதுவும்
ஞானத்துக்கேற்றவர்க்கு நன்றோனிராமயமே. ௨௪௫

ஆசைக்கடலி லலைவாயப்பட்டேயலைந்து
மோசப்படுதன் முறையோனிராமயமே ௨௪௬

எட்டிரண்டுமின்னதென்று மேழையறியாதபடி
வெட்டிவெளிப்பேதையெனவிட்டாயநிராமயமே. ௨௪௭

பித்தம்பிடித்த பிரபஞ்சத்தாரபோலன்றோ
முத்தாகிருக்கு முறைகாணிராமயமே. ௨௪௮

காமக்குரோதமத மாச்சரியக்காரருக்கே
ஆமோதிருக்கருணை யையாநிராமயமே. ௨௪௯

ஜெகத்துமயமாயுந் தேஜோமயமாயும்
அகத்துடனுவான் நன்றோநிராமயமே. ௨௫௰

கேசாதிபாதமுதல் கொப்பகுவட்டிலனைத்த
ஈசாவுனக்கே யியல்பாம்நிராமயமே. ௨௫௧

எக்கலைக்குஞ்சொக்காதியங்குமுனைதொழுதல்
நிர்க்கவலைகளெல்லா னிலைகாணிராமயமே. ௨௫௨

அகத்துவிழிபு மறிதறகரிதாயவுன்பால்
முகத்துவிழியோ முயலுமநிராமயமே. ௨௫௩

திக்குவிசயஞ் சிவராசயோகியர்க்கரம்
துக்கவலையோர்க்குந் துறையேநிராமயமே. ௨௫௪

வாழுகிறோமென்றே வலககாரமபேசலையோ
ஏழாமலரருக கிறைகாணிராமயமே. ௨௫௫

ஈடெனக்காரென்றே யெதிராபேசுமட்டியுடல்
நீடூழிகால நிலையோனிராமயமே. ௨௫௬

பாகாய்க்கசிந்துருகும் பரமபதத்தினற்குந்
தேகாபிமானமெலலாந தீயனிராமயமே. ௨௫௭

ஆவியுடல்பொருளு மடக்கக்கொள்ளைகொண்டுமெனைப்
பாவியென்றுதளளப படுமோநிராமயமே. ௨௫௮

அளந்தாலுமிழ்ந்தவுல கவ்வளவுமெவ்வளவும
உளந்தெளியாருக்குருடா னுண்டோனிராமயமே. ௨௫௯

சொன்னபடிக்கிணங்கா துட்டன்யானகிலுமென்
வன்னமலர்பதத்தை வைப்பாயநிராமயமே. ௨௬௰

பாதமுடியின் பரமார்த்தமாமுனக்கு
யேதுவென்றே யிசைப்பேனிராமயமே. ௨௬௧

முன்னுளிருந்த முறைபோலுமூர்த்திகராய
எந்நாள்வருவதெனக் கெந்தாய்நிராமயமே. ௨௬௨

மடக்கெடுத்துவீசி மணற்குடித்தநீரதனால்
கடற்குறையுண்டோவென் கண்ணேநிராமயமே. ௨௬௩
தானேதானெவ்வுயிர்க்குந் தற்பரமாய்நிற்பதுடல்
ஊனுகிகொண்ட வுளவேநிராமயமே. ௨௬௪
பாசமொழித்துநெறி பற்றிநின்றவித்தகர்க்கு
வீசுநிருக்கருணை வீசும்நிராமயமே. ௨௬௫
கற்றகல்வியற்று கன்மமுதல்பாசமற்று
உத்தமர்க்குச்சித்த மொடுங்குநிராமயமே. ௨௬௬
சித்தனிரஞ்சனத்திற் சென்றிருக்கவல்லார்க்குப்
புத்தினிருவிகற்பம் பூணும்நிராமயமே. ௨௬௭
நீட்டிக்குறுக்க நெடும்பகையென்பாரதுபோற்
காட்டிமறைக்கக் கணகோநிராமயமே. ௨௬௮
கர்ப்பூரவுண்டை கரைவதுபோலககரையுந்
தற்போதர்க்கருணை தந்தாநிராமயமே. ௨௬௯
தேனோடுபாகாய் திரண்டமுதமென்னவுமென்
ஊனோடுடலோ டுறைந்தாய்நிராமயமே. ௨௭0
கண்டித்தவெள்ளுங் கரும்பும்போலுமெனது
சண்டித்தமெய்யதற்குச் சாரணீநிராமயமே. ௨௭௧
ஐந்துபுலவேடருக்கே யாளாககினுமக்கு
வந்தபலனென்ன வழுத்தாய்நிராமயமே. ௨௭௨
ஓபாக்கவலைக் குறித்தாம்புழுக்குரும்பை
ஆயெனைவகுத்த தையாநிராமயமே ௨௭௩
ஐவர்க்குமென்னை யடங்கச்சிறையாககுவது
உய்யுங்கருணைக ருளதோநிராமயமே. ௨௭௪
ஊசிதனைக்காந்த மூகந்தணைக்குமானவே
பாசத்தைப்போக்கியருள் பாராயநிராமயமே. ௨௭௫
உள்ளதெளிந்தே வொளியாய்பிறங்கினர்க்குக
கள்ளந்தெளியக் கனவுகண்டேனிராமயமே. ௨௭௬
அற்புதமேகிற்குணமே வன்பர்க்கருள்புரியுஞ்
சற்குருவேயெககன் சலுவேநிராமயமே. ௨௭௭
அழியாவருள்வாழி யள்ளியடியேன்றனக்கா
மழையாய்ப்பொழிந்தானீ முன்னோர்க்கும்வாழியவள். ௨௭௮
முத்தர்க்கும்வாழியெங்கும் முன்னோர்க்கும்வாழியருள்
வித்தகர்கரும்வாழியெங்கள் விளங்காய்நிராமயமே. ௨௭௯
ஒழியாவருள்வாழி யத்தமர்களுமவாழி
அழியாப்பதிவாழி யையாநிராமயமே. ௨௮0

குன்றாக்குணக்குடிகொண் டோராமெய்வித்தகரும்
எந்நாளும்வாழியரு ளெந்தாய்நிராமயமே. ௨௯௩

நிராமயக்கண்ணி முற்றிற்று ஆக-பாடல்-௫௬௧.

——— :*: ———

பராபரக்கண்ணி

அண்டபுவனமென்று மாடுதிருக்கூத்தினையான்
கண்டுமகிழ்ந்திடவே காட்டாயபராபரமே. ௧

ஆதியாயாண்டவனு யகதுகதுவாகிதுவாய்ச்
சோதியாய்நின்மலமாய்ச் சூழ்ந்தாய்பராபரமே. ௨

வேதமறைப்பொருளை வேதாந்தத்துட்கருவை
ஓதியுனையறிந்தோ ருண்டோபராபரமே. ௩

அண்டம்புவனமுட ஞகாசமென்றுதீபிக்
கொண்டாய்மெய்ஞ்ஞானக் கூத்தோபராபரமே. ௪

நாவார்புகழ்கேட்ட நாயகனேநாதாந்தப்
பூவாய்மலர்ந்திருக்கப் பூநதார்பராபரமே. ௫

போராற்பெரிய பெரும்பொருளேபேதைதனக்
காராரிருந்தும்பல னோபராபரமே. ௬

வாராய்நற்கருணை மாவருட்சித்தித்திடவே
பாராயோவையா பகராய்பராபரமே. ௭

ஆறுலுமுன்பாதம் யாசிததிருப்பதறகுத்
தானுயிரங்கியருள் தாராயபராபரமே. ௮

நாதாந்தமூல நடுவீட்டுகருள்ளிருக்கு
மாதவத்தோர்க்கான மருவேபராபரமே. ௯

உடலுக்குயிரேயென் னுள்ளமேயுன்பதத்தைக
கடலுமலையுந்திரிந்துங் காணேன்பராபரமே. ௰

மாநதிரத்துககெட்டா மறைப்பொருளேமன்னுயிரே
சேர்ந்தவெழுதோற்றத்தின் சிதமேபராபரமே. ௧௧

தனியேனுக்காதரவு தாரணியில்லாமல்
அனியாயமாவதுனக் கழகோபராபரமே. ௧௨

ஓடித்திரிந்தலைந்து முன்பாதங்காணாமல்
வாடிக்கலங்குகிறேன் வாராய்பராபரமே. ௧௩

தூராதிதூர தொலைந்துமதிலுன்பாரம்
பாராதபாவத்தாற் பயந்தேன்பராபரமே. ௧௪

தேடக்கிடையாத திரவியமேதென்கடலே
ஈடுனக்குமுண்டோ விறைவேபராபரமே. ௧௫

அரியபெரும்பொருளே யன்பாயொருவார்த்தைப்
பரிபூரணமாய்ப் பகராயபராபரமே. ௧௬

ஐயேயுனக்குதவு மாதாவைவிட்டுவிடுத்
தையலரைத்தேடித் தவித்தேன்பராபரமே. ௧௭

எத்திசையுநோக்கி யிசையாயிருக்கூத்தாய
வித்தைவிளையாட்டு விளைப்பாயபராபரமே. ௧௮

எப்பொழுதுமுன்பதத்தி லென்கருத்தேயெய்துகலுக்
கிப்பொழுதேகைப்பிடித்தா னிறைவேபராபரமே. ௧௯

வாதுகடரவரும் வம்பரைப்போற்றுஷிமனம்
ஏதுக்கடாவறியா னெளியேன்பராபரமே. ௨0

கண்ணேமனோன்மணியே கண்பார்வைக்கெட்டாத
விண்ணடங்காவெட்ட வெளியேபராபரமே. ௨௧

அடக்கவரிதா மாயிரம்பொறிபுகட்டிப்
படிக்கப்படிப்பெனக்குப பகராய்பராபரமே. ௨௨

எத்தவங்கள்செய்தாலு மின்பமுடன்பதத்தை
முற்றுறொருபோது முற்றுறாபராபரமே. ௨௩

சொல்லுக்கிணங்காது சூத்திரத்தைப்பார்த்திருக்க
அல்லும்பகலுமெனக காசைபராபரமே. ௨௪

நாற்றச்சடிலமதை நம்பாமுகந்திருக்கப்
பூத்துமலர்திருக்கும் பூவேபராபரமே. ௨௫

சோற்றுப்பொதியைச் சுமந்துதிரிந்தலைந்தே
ஆற்றுமனின்றுகளைத் தழுதேன்பராபரமே. ௨௬

காற்றுத்துருத்திதனைக கலலாயணைந்திருக்கச்
சூத்திரமாயநின்றாய் சுழியேபராபரமே. ௨௭

கோலத்திருவடிவு கோதையர்களாசையினால்
ஆலைகரும்புபோ லானேன்பராபரமே. ௨௮

கேளாயோவென்கவலை கேட்டிரங்கியடிமைதனை
ஆளாயோவையர்பா லானேன்பராபரமே. ௨௯

எத்தனைதான்குற்ற மெதிர்த்தடிமைசெய்தாலும்
அத்தனையுநீபொறுப்ப தழகோபராபரமே. ௩0

அல்லலவினையா லறிவுகெட்டவான்மாவாய்
எல்லாம்பதருமென நின்றேன்பராபரமே. ௩௧

சொல்லரியஞானச் சுடரேயொருவார்த்தை
செல்வம்பொருந்திடவே செப்பாயபராபரமே. ௩௨

நித்தமுனைத்தொழா நிர்மூடனாயிருக்கும்
பித்தனேயென்காண் பிறந்தேன்பராபரமே. ௩௩

உற்றார்கடாலு முறவின்முறையோராலும்
பெற்றார்களாலுமுனைப் பிரிந்தேன்பராபரமே. ௩௪

ஏழைமுகம்பார்த் தெளியேனையெப்பொழுதும்
ஆழாமலாண்டருளென் னழகேபராபரமே. ௩௫

பூவவுடலெடுத்துப் பாதகனாயான்பிறந்துள்
ஆவிகெடுவதுனக் கழகோபராபரமே. ௩௬

வாராயோவென்னிடத்தில் வந்தொருக்காலென்முகமும்
பாராயோசற்றே பகராய்பராபரமே. ௩௭

பார்க்கப்பலவிதமாயப் பல்லுயிருக்குள்ளிருந்து
ஆர்க்குந்தெரியாம லானாய்பராபரமே. ௩௮

ஆனாலும்பொல்லா தரும்பாவியாகவுடல
ஏனோவெடுத்தே னெந்தாய்பராபரமே. ௩௯

கர்ப்பூரதீபக் கனலொளிபோற்காட்சிதர
முப்பாழும்பாழாய் முடித்தாய்பராபரமே. ௪௰

கரும்பேநவரசமே கடலமுதேகண்மணிக்குள்
அரும்பொருளாய்நின்ற வழகேபராபரமே. ௪௧

ஏழையடியேனை எப்படியுங்கைபிடித்து
ஆளாதிருப்பதுனக் கழகோபராபரமே. ௪௨

ஆளாயோவையா வடியேன்பிதற்றுதலைக
கேளாயோவென்றன் கெதியேபராபரமே. ௪௩

ஊனாகிருள்ளுயிரி லொட்டாதவக்காவாயத்
தானாகநின்ற தனுவேபராபரமே. ௪௪

பொன்னான்மயக்கெடுத்துப் புதநிகெட்டுநானெனவே
பன்னாளுநின்றாற் பலனோபராபரமே. ௪௫

இல்லல்லாகூடவென் றெனைமறந்துகொண்டுனையே
சொலலவருள்மெஞ்ஞானச் சுடரேபராபரமே. ௪௬

ஐயோவடிமைதனக் காரிருந்துமென்னபலன்
கையாற்கவிந்தணைக்கக காணேன்பராபரமே. ௪௭

ஆனாலுமேழை யடியேனுக்காதரவாய்த்
தானாயிரங்கியரு டாராய்பராபரமே. ௪௮

தூங்கியிருந்து தொழுவோர்முகம்பார்க்கும்
வேங்கைப்புலியாக்கு விப்பாய்பராபரமே. ௪௯

கண்ணேகருத்தேயென் கண்மணியேகண்ணிறைந்த
விண்ணடங்காவெட்ட வெளியேபராபரமே. ௫௰

காசாசைகொண்டு கலங்கியேகெட்டலைந்த
தோஷியாய்நின்றேன் துணையேபராபரமே. ௫௧

ஐயோவெனதுதுய ராரிடத்திற்சொல்லிநின்று
கையெடுக்கப்போறேனென் கண்ணேபராபரமே. ௫௨

என்னதான்செயநிடுவே னென்விதியைச்சொல்லியழு
வுன்னையன்றிவேறெனக்கு முண்டோபராபரமே. ௫௩

முக்கண்விழியொளியே முத்திதருமுத்தமனே
அக்கண்டிறந்தோர்க் கறிவேபராபரமே. ௫௪

முப்பாழும்பாழாகி முத்திபெற்றிருக்கவெனை
கைப்பிடிப்பதெப்போதென் கண்ணேபராபரமே. ௫௫

உலலாசமாக வொளிபரந்திடவுன்
செல்வம்பொழிந்திடவே செப்பாயபராபரமே. ௫௬

மாச்சரியஞ்செய்யு மதமொடுங்கிமுத்திபெறக்
காட்சிதருவதெப்போ கண்ணேபராபரமே. ௫௭

சண்டாளனென்றெனைச் சகலவுரையிட்டாலும்
கொண்டணைபபதுன்பாரங் குருவேபராபரமே. ௫௮

முத்திபெறாமெஞ்ஞான முச்சுடரைக்காணுமற்
செத்திறந்துபோனாலென் செய்வேன்பராபரமே. ௫௯

தன்னையறிந்துணரத் தயையாயொருவார்த்தை
இன்னபடியென்றே யியம்பாய்பராபரமே. ௬0

களியேகண்டுன்னுடைய கைப்பிடிப்போமென்றுசற்றே
எளியேன்முகம்பார்த் திரங்காயபராபரமே. ௬௧

பாசவினைபோக்கி பலவினையைப்பாழாக்கி
ஆசைவைப்போர்தங்க ளருளேபராபரமே. ௬௨

ஆளவருவோமென் றப்பாயொருவார்த்தை
ஏழைமுகம்பார்த் தியம்பாய்பராபரமே. ௬௩

நிலைகாட்டுங்காய நிசமென்றுநிச்சயித்து
புலையாட்டனென்றுதள்ளப் போமோபராபரமே. ௬௪

பார்க்கப்பலவிதமாய்ப் பலசமையமாகவொரு
வாக்கைவெளிப்படுத்தி வைப்பாய்பராபரமே. ௬௫

ஆனாலெளியோனுக் காதரவேயில்லாமல்
பேனாலுனக்கழகோ புகலாய்பராபரமே. ௬௬

நீச்சாய்ப்பெருகிவர நிரம்புமானந்தவெள்ளம்
பாய்ச்சாயோவையா பகராய்பராபரமே. ௬௭

எத்தனையோநெஞ்சு மெளியேன்றனக்குதவி
உற்றுருனைத்தவிர வுண்டோபராபரமே. ௬௮

கன்னமிகுங்கருவி கரணமதைச்சுட்டோர்கள்
தன்னுக்குட்டாணும் தானேபராபரமே. ௬௯

சாயாமற்காய்த்துக் கனிந்துசொரிவதற்கு
மாயமாய்ப்பூத்த மலரேபராபரமே. ௭௰

உயிருக்குயிரான வுட்கருவுக்குள்ளமைவே
தயையாயென்க்குதவி தந்தாய்பராபரமே. ௭௧

அறிவையறிவோருக் கானந்தவெள்ளமதாய்
கறையறவேபொங்குங் கடலேபராபரமே. ௭௨

மறைப்பொருளைக்காண மடையனிவனென்றியம்பிச்
சிரிப்பார்சிரிக்கிலென்ன செயவேன்பராபரமே. ௭௩

குறிவிளக்குகுருவடியைக் கொள்கையுடன்போற்றாமல்
அறிவுமயங்குகின்றே னையாபராபரமே. ௭௪

வல்லாரைக்கெஞ்சி வலியாரைக்கால்பிடித்து
இல்லாரைநம்பி யிருந்திளைத்தேன்பராபரமே. ௭௫

சொல்லும்பதர்நூற்றிச் சூத்திரத்தைப்பாராமற்
கல்லும்நெல்லும்போலாகக் கலந்தேன்பராபரமே. ௭௬

ஜெகமுழுதுஞ்சுற்றியுமுன் சீர்பாதங்காணமற்
றிகைத்தலைத்தேனீயுந் தெளிவாய்பராபரமே. ௭௭

கள்ளர்கருத்துகளைக் கட்டோடறுத்தவருக்
குள்ளிருக்குமெஞ்ஞான வொளியேபராபரமே. ௭௮

கும்பிக்கிரைவிரும்பிக் கொடுப்பாதமைத்தேடிச்
சம்பித்திருந்தே சலித்தேன்பராபரமே. ௭௯

காண்காதவாசை கடித்தாலெங்காண்முகமும்
வீங்காதோவையோ விதியேபராபரமே. ௮௰

தூங்காமற்றூங்கி தொழுதிருக்கவென்னுடைய
ஆங்காரமில்லா மகற்றாய்பராபரமே. ௮௧

தேனமிர்தமூறத் திவ்யமதுரஞ்சொரியத்
தூணுமொருவார்த்தை தாராயபராபரமே. ௮௨

சாத்திரங்களோதுஞ் சதுர்மறையோர்க்கெட்டாத
சூத்திரமாய்நின்ற சுழியேபராபரமே. ௮௩

வேற்றொருவர்காணாத வேதாந்தத்துட்பொருளைப்
பார்த்தோர்கடைகெயதும் பலனேபராபரமே. ௮௪

சாதிதனத்துடனே சார்ந்திருந்துபட்டதுயர்
போதும்போதும்போதும் போதும்பராபரமே. ௮௫

உற்றாரைநம்பியிருந் தொருபலனுங்காணமற்
றெய்த்தாலெனக்குதான் சின்னம்பராபரமே. ௮௬

செல்லுமுறையறிந்து சித்திவழிகாணுமற்
கல்லுமரம்போலானேன் கண்ணேபராபரமே. அ௭

ஓகோவுனையறிந்து மொருபலனுங்காணுமற்
போகாமற்காத்தருளென் புனேபராபரமே. அஅ

உன்னையறிவதற்கோ வுடலெடுத்தேனென்றன்னைச்
சின்னஞ்சொல்லுவார்கட் கென்செய்வேன்பராபரமே. அசு

தெரியாதவின்பத் தெளியவருண்மயமாய்ப்
பரிபூரணமுடனே பாராய்பராபரமே. சுய

ஆச்சிதனைத்தேடி யாசைவைத்தலையாமற்
பூச்சியாயேனே பிறந்தேன்பராபரமே. சுக

காசைவிரும்பிக் கலங்கித்திரிந்துழ்பால்
ஆசைவிரும்பா தலைந்தேன்பராபரமே. சு௨

சாகாமற்செத்து தயசச்சிதானந்தமாய்ப்
பாகமாயாகமுகம் பகராயபராபரமே. சுங

வாராயோவையா வந்திரங்கிகொண்டணைக்கப்
பாராயோசற்றே பகராய்பராபரமே. சுச

ஆசைவலைப்பாசமொறி ப'த்தனையுங்கட்டறுத்து
வாசிதனிலேற்றியெனை வைத்தாள்பராபரமே. சுரு

வேஷந்தனைப்போட்டு வேதாந்தசாத்திரத்தைக்
காசுபணம்பரிக்கக கற்றேன்பராபரமே. சுசு

செய்ததெல்லாங்குற்றஞ் சிறியேன்றனக்கிரங்கிக்
கைதூக்கிக்கொண்டருளென் கண்ணேபராபரமே. சு௭

மாளாமயக்கறுத்து மனக்கறையைத்தான்கழுவி
ஆளாக்கிகொள்வாயென் னையாபராபரமே.

நாட்டமங்குமிங்கிருக்க நாதாந்தமுத்திநிலை
காட்டாயணைந்தருளென் கண்ணேபராபரமே. ...சு

சிந்தைதனைத்தெளிந்து சித்திமுத்திபெற்றுயர்ந்த
உன்றன்குணங்குடியார்க் குயிரேபராபரமே.

பராபரககண்ணி முற்றிற்று - ஆகபாடல் - சுசுரு.



றகுமான்கண்ணி.

பார்க்கப்பலவிதமாய்ப் பல்கலைதன்னையடை
கருந்திருக்கருணைக் கண்ணேறகுமானே.

ஈறுமுதலுமறறே யியங்குகின்றமுசசுடராய்க
காரணிக்கும்பூரணமே கண்ணேறகுமானே. ௨

பாணிக்கவொண்ணுப் பதம்பெறுதற்கென்சிரசைக்
காணிக்கைவைத்தேனென் கண்ணேறகுமானே. ௩

பொய்யடிமையாகிலுமுன் பொன்னடிகளாக்கியென்னை
கைக்கொடுத்தனைத்தான் கண்ணேறகுமானே. ௪

பெண்டுபிள்ளையென்றே பிதற்றுதலைவிட்டயல்லாமற்
கண்டபலனொன்றுமில்லை கண்ணேறகுமானே. ௫

பேதலித்தேனுன்னடிமை பேதமில்லாமலுனைக்
காதலித்தேனுண்டருள்செய் கண்ணேறகுமானே. ௬

ஏகப்பெருவெளியி லிருகடலிடாகமபமற்ற
காசமதுவானேனென் கண்ணேறகுமானே. ௭

ஐயோவுனதருளி லாசையறும்பாவியென்னை
கையைநெகிழ்த்தாதருளென் கண்ணேறகுமானே. ௮

போதமயமாகவெங்கும் பூரணித்தகாரணத்தைக்
காதலித்துநின்றேனென் கண்ணேறகுமானே. ௯

எல்லார்க்குமுத்தளிக்கு மியல்போமறேனைகட்கும
கல்லுள்ளமுதளிக்குங் கண்ணேறகுமானே. ௰

சொல்லும்பதாரீகசிச் சுமமாயிருந்தருளைக்
கல்லாருங்கலலையென் கண்ணேறகுமானே. ௧௧

வெட்டவரும்பாவியென்னை வீணிலெனைத்தள்ளாமற்
கட்டியணைத்தாண்டருள்செய் கண்ணேறகுமானே. ௧௨

யானைரதமேறு மரசாபெறுவாழ்வுமுதற்
கானற்சலம்போலல்லவோ கண்ணேறகுமானே. ௧௩

உடைருடைமையுமெடுத்திட் டென்னுடைமையென்பவர்க்கு
கபரில்வருந்துணையே கண்ணேறகுமானே. ௧௪

ஊனெடுத்தாண்முதலாய் உபயோகமற்றபயான்
கானினிலவானேனென் கண்ணேறகுமானே. ௧௫

வாசிதனிலேறி மனமகிழ்ந்துவாழாமற
காசாசைகொண்டேனென் கண்ணேறகுமானே. ௧௬

வீடோவென்றேகம் விழுமிடந்தான்வீதிகளோ
காடோசெடியோவென் கண்ணேறகுமானே. ௧௭

பாக்குமுடன்வளர்த்த பாழுடற்றுயைக்கிறையோ
காகங்கழுக்கிறையோ கண்ணேறகுமானே. ௧௮

ஏங்காமலக்கினிக்கு மேகாந்தமாகவுனைக்
காணக்கவந்தபாங்கருள்செய் கண்ணேறகுமானே. ௧௯

தொண்டுசெய்யாநின்ற துறவியர்களையருளைக்
கண்டுகொள்ளக்கண்டாயே கண்ணேறகுமானே. ௨௰

அல்லும்பகலு மழைமைமனத்தேம்புதற்குக்
கல்லுங்கரைந்திடுமென் கண்ணேறகுமானே. ௨௧

வேட்டைபெரிதன்றே வெறிநாயைக்கைப்பிடித்து
காட்டிற்புகலாமோ கண்ணேறகுமானே. ௨௨

அடைத்தமனக்காட்டை யாழுமைந்துகள்வரையுங்
கடத்தமுடி வதில்லை கண்ணேறகுமானே ௨௩

மடம்புநாய்போல மயங்குமென்னையுன்னைவிட்டக
கடத்துவகைநாக்காணேனென் கண்ணேறகுமானே. ௨௪

வையம்பொய்யென்றே மறைபோலவிட்டதெல்லாங்
கையுமெய்யுமாச்சுதென்றன் கண்ணேறகுமானே. ௨௫

சொல்லருமெய்ஞ்ஞானச் சுடரொளிகண்டாலென்மனக்
கல்லுங்கரைந்திடுமென் கண்ணேறகுமானே. ௨௬

மாதாபிதாவுமென்னை மயக்கிமயக்கியுன்னைக
காதலிக்கவொட்டாரென் கண்ணேறகுமானே. ௨௭

வெற்றிதருமெய்ப்பொருளை வேதாந்தத்துட்கருவைக்
கற்றோர்க்கருள்புரியவுங் கண்ணேறகுமானே. ௨௮

உடையாபரணமென வுன்னியுன்னிப்பாவிமனங்
கடைப்படலாமோவென் கண்ணேறகுமானே. ௨௯

ஓயாக்கவலையினா லுள்ளுடைந்துவாடுதற்கோ
காயமெடுத்தேனென் கண்ணேறகுமானே. ௩௰

நேசம்வைத்துன்னடிமை நின்பதத்துநிற்கல்லாது
காசுதனைக்கோவென் கண்ணேறகுமானே. ௩௧

எண்ணாதவெண்ணமெல்லா மெண்ணியெண்ணியுன்னடிமை
கண்ணுக்குட்சிட்டானேனென் கண்ணேறகுமானே. ௩௨

பொய்யெடுத்தானென்று பிறககணித்தாயாகிலெனைக்
கையணைப்பாருண்டோவென் கண்ணேறகுமானே. ௩௩

விண்ணூடாகாணா விரிகருணைச்செஞ்சுடரைக்
கண்குளிரத்தந்தருள்செய் கண்ணேறகுமானே. ௩௪

தீங்குபேரின்பமதைச் சார்ந்தகுருநாதனுக்கே
ங்குலபகறனுறுமென் கண்ணேறகுமானே ௩௫

தூங்காமறந்தூங்கி தொழுதுதொழுதுன்னருளைக
காணவைக்கருள்செய கண்ணேறகுமானே. ௩௬

ஞானமுள்ளோர்பாலைக் கிருப்பதுபொய்யென்பதையான்
கண்டுகொண்டேனையாவென் கண்ணேறகுமானே. ௩௭

பேற்றற்றிருத்திதனைப் பேக்குழியைச்சாக்கடையைக்
காத்தேன்வளர்த்தேனென் கண்ணேறகுமானே. ௩௮

பேர்த்தத்தனம்புதைத்த புல்லர்க்கிருப்பூசி
காதற்றதும்வருமோ கண்ணேறகுமானே. ௩௯

பாடிப்படித்தறிந்தும் பற்றாரோபாசவலைக
காடுகொண்டுபோவாரோவ் கண்ணேறகுமானே. ௪௰

நிறைந்தபரிபூரணமே நிர்க்குணமேநிர்மலமே
கருணைககடலேயென கண்ணேறகுமானே. ௪௧

பார்ப்பாயோவென்றன்முகம் பாவியர்காமவலைனக்
காப்பாயோவையாவென் கண்ணேறகுமானே. ௪௨

மெய்யெடுத்தநாண்முதலா மெய்யறியாப்பாவியெனைக்
கைவிடவேண்டாமென் கண்ணேறகுமானே. ௪௩

போராறுப்பொதியைச் சுமந்தேயலைந்துசுழல
காறறுத்துருப்பானேனென் கண்ணேறகுமானே. ௪௪

சோந்தசுற்றந்தன்னைச் சிதறவிட்டசிந்தையாகருந
காந்தமலையேயென் கண்ணேறகுமானே. ௪௫

உலையிலிடுமெழுகி னொப்பாகவென்றனுள்ளாய
கலைதலதுகாரியமோ கண்ணேறகுமானே. ௪௬

ஆவிதனைகசூரங்கா யாட்டுகின்றவையறிவை
காவலிடவருள்செய கண்ணேறகுமானே. ௪௭

வேஷந்தனைப்போட்டு மெய்மயக்கும்பொயக்குருவாய
காசுபணம்பறித்தேன் கண்ணேறகுமானே. ௪௮

எட்டிப்பிடிககும் விதமறிந்தாலுன்பதத்தைக
கட்டிபபிடித்திடுவேன் கண்ணேறகுமானே. ௪௯

அவியாமனுமவிய வாயுங்கலையோர் கடமைக
கவியுந்திருககருணைக் கண்ணேறகுமானே. ௫௰

சித்திதருமவேதாந்தச் செழுஞ்சுடரைச்சின்மயத்தை
கற்றவர்க்குமுத்திதருங் கண்ணேறகுமானே. ௫௧

அருவிசொரியும்படிக் கம்பரததிலன்புவைத்தாற
கருவிபிரியாதேன் கண்ணேறகுமானே. ௫௨

மாராயவெள்ள மருங்கழிந்தபின்கருணைக்
காராமழைபொழியுங் கணணேறகுமானே. ௫௩

எண்படாதெண்ணமெல்லா மெண்ணியெண்ணிநெஞ்சமொரு
கணபடாதலறுகுவதோ கண்ணேறகுமானே. ௫௪

கோலங்குறியில்லாக் குருவடிதொழார்கண்டனங்
காலனிருப்பிடமோ கண்ணேறகுமானே. ௫௫

உள்ளுயிரினுள்ளே யுறைந்தபரஞ்சோதிவரிற
கள்ளமனந் துள்ளாதென் கண்ணேறகுமானே. ருசு

சேர்க்குந்திரவியமுஞ் சித்திரமணிமண்டபமுங்
காக்குந்துணையோவென் கண்ணேறகுமானே. ருஎ

பட்டுடையுமொப்பனையும பாதகமுமென்னைவிட்டுக
கட்டோடொழிவதிலை கண்ணேறகுமானே. ருஅ

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணுதிருக்குமோங்
கண்ணூடிக்குண்முகமாங் கண்ணேறகுமானே. ருகூ

மண்டபமுந்தண்டிகையு மாளிகையுஞ்சாளரமுங்
கண்டுகழிக்கவருள் கண்ணேறகுமானே. சுய

மன்னுங்கருவி மௌனமணிப்பெட்டகத்தைக்
கன்னமிடப்போமோவென் கண்ணேறகுமானே. சுக

என்றுமன்னைசுற்றமுத லெனக்குப்பழிகாரரெனக
கண்டறிந்துகொண்டேனென் கண்ணேறகுமானே. சுஉ

கொடியமனத்துயரைக் கூடாதிருப்பதற்குக்
கடுகமுடுகிவருங் கண்ணேறகுமானே. சுங

ஏச்சுமதிமயக்கு மில்லார்களானுடைத்தேங்
காய்ச்சிரட்டையானேனென் கண்ணேறகுமானே. சுச

விள்ளரியவேதம் விளைவுகலையுங்கடிந்து
கள்ளமனந்துள்ளுவதேன் கண்ணேறகுமானே. சுரு

வேதககருவை வினைகருணையகுஞ்சரத்தைக்
காதலித்தேனுதரித்தாள் கண்ணேறகுமானே. சுசு

அரும்பேமலரேயென் னுசைதரும்வாசனையே
கரும்பேரசமேயென் கண்ணேறகுமானே சுஎ

பூரணமேயற்புதமே பொங்குகருணைக்கடலே
காரணமேயென்னருட் கண்ணேறகுமானே. சுஅ

ஓயாதோவென்கவலை யுன்னருளாலென்கருவு
காயாதோவையாவென் கண்ணேறகுமானே. சுகூ

ராஜாங்கம்வேண்டி ரதகஜங்களேறுதற்குக்
காசெங்குக்கேளேனென் கண்ணேறகுமானே. எய

தந்தைதாயென்றே தயங்குகின்றபாவிமனக்
கண்டிறக்கவந்தருள்செய் கண்ணேறகுமானே. எக

அச்சமெமக்கில்லையென வைம்புலனென்பாழ்மனத்தைக்
கைச்சூறையாடிவிட்டேன் கண்ணேறகுமானே. எஉ

இனியவமிர்தம்பொங்கி யெங்குங்கனசுத்திவரக்
கனிவாய்திறந்தருள்செய் கண்ணேறகுமானே. எங

ஆணைவிட்டேனாணையிட்டே னையனேயுன்னருளைக்
காணவெனக்கருள்செய் கண்ணே றகுமானே. எச

அல்லும்பகலு மறிவிலயமாவோர்க்குக்
கல்லும்பிளந்திடுமென் கண்ணே றகுமானே. எரு

புவியுமெழுவானும் பொன்னுலகும் பல்லுயிருங்
கவியுந்திருக்கருணை கண்ணே றகுமானே. எசு

எண்ணரியதாக விருந்திடினுஞ்சூத்திரமோ
கண்ணிலொளிபாய்ந்ததுவோ கண்ணே றகுமானே. எஎ

உளையேவொழுக்கோவென் னுளளிங்கழுவத்தழுவக்
கழுவாததுடக்கோவென் கண்ணே றகுமானே. எஅ

உறங்கினூத்திரையு முறைவின்முறை திரையுங்
கடந்தரிகதுவிட்டருளசெய கண்ணே றகுமானே. எகூ

நற்பவளக்கொழுந்தே நவமணிக்குமற்புதமே
கைபபொருட்குமெய்ப்பொருளே கண்ணே றகுமானே. அய

ஒப்புறவிதப்பி யுணாவற்றுனைக்கைவிட்டுக்
கப்பணைகைகொண்டேனென் கண்ணே றகுமானே. அக

பசப்பிப்பணம்பறிக்கும் பாவிகருருமுகத்தைக்
கசப்பாகக்கண்டேனென் கண்ணே றகுமானே. அஉ

வேதியர்க்குமாதவர்க்கு மெய்யடியார்கட்குமுனைக்
காதலிப்பபோருக்குமருள் கண்ணே றகுமானே. அங

வேலைவேறோடறுந்து மெய்யடிமையாக்குதற்கென்
காரியத்திறமுமதமென் கண்ணே றகுமானே. அச

பழகப்பழகிருந் பாக்கியத்தைப்பைமுதலைக்
களவுகொடுத்தேனென் கண்ணே றகுமானே. அரு

நாமாண்மைகண்முழுது நாசமாக்கார்ச்சமகருங்
காமவினைபோமோவென் கண்ணே றகுமானே. அசு

அடிமையுனதபப மாகாதிருக்கினுமென்
கடைவழிக்குக்கட்டமுதே கண்ணே றகுமானே. அஎ

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
காதலித்துநின்றேனென் கண்ணே றகுமானே. அஅ

இனமுஞ்சனமுமென மெண்ணிப்பெண்ணியுன்னடிமை
கனசழக்குப்பட்டேனென் கண்ணே றகுமானே. அகூ

நவசூத்திரத்தைவிட்டு நன்னினைவெண்ணுதுன்மனங்
கவலைப்படுவதெனன கண்ணே றகுமானே. கூய

மடிப்புங்கோலைகளும் வஞ்சகமுமென்னெஞ்சைவிட்டுக்
கடக்கடப்பதில்லை கண்ணே றகுமானே. கூக

பலவிடத்தைச்சுற்றிப் பரதவித்துப்பாவிமனங்
கலங்கிமலங்குவதென் கண்ணேறகுமானே. ௬௨

உள்ளக்கருத்தா லுவந்துறவுகொள்ளாமற்
கள்ளமனந்துள்ளுவதென் கண்ணேறகுமானே. ௬௩

மன்னும்முதன்யற்ற மயக்கமறக்கல்லாமைக்
கண்ணெடுத்துப்பாரேனென் கண்ணேறகுமானே. ௬௪

தேசிகனென்னுந் திருட்டுகுருக்கள்சொலலார்
காசாயமதியேனென் கண்ணேறகுமானே. ௬௫

தன்னையறிந்து தவம்புரியாத்தன்மையினாற்
நன்னெஞ்சனானேனென் கண்ணேறகுமானே. ௬௬

மாடகூடங்கண்மணி மண்டபமுமன்றுகளும
காடுகொள்ளக்கண்டேனென் கண்ணேறகுமானே. ௬௭

சூரனரியவேகதறிக கூடபிடினுலகாணு
கருவேதருவேயென் கண்ணேறகுமானே. ௬௮

மருளாத்தவத்தான் மறபபுனைப்பவர்க்குக
கருணைகுமுணர்வன்றி கண்ணேறகுமானே. ௬௯

உதிக்குமுணர்வன்றி யுணர்வேயுணர்வொன்றிற்
கதிக்குங்குணங்குடியென் கண்ணேறகுமானே. ௭௰

நகுமான்கண்ணி-முற்றிற்று-ஆகபாடல்-௭௰.

———0———

எக்காலக் கண்ணி.

———:*:———

முத்திதரும்வித்தை முனையிலவைத்துச்சீராட்டி
நித்தமறவாம லினைப்பதினியெக்காலம். ௧

ஆதியின்மேலாசை யடர்ந்தெரிந்தவக்கினியின்
சோதியினால்வந்து சுகம்பெறுவதெக்காலம். ௨

காமக்கடல்கடக்கக் கர்த்தவியக்கப்பல்வைத்து
சேமநிஷ்டைதயப நிறுத்துவதுமெக்காலம். ௩

பங்கப்பழிப்பேணிறை பையல்யான்றையலர்கள்
கொங்கைமயான்பாராக குருடாவதெக்காலம். ௪

கொங்கைதனைப்பாராக் குருடாயிருப்பதுடன்
அங்கமுமிழ்மோக மழிவதினியெக்காலம். ௫

அங்கமுமிழ்மோக மழிந்தேயறமெலிந்து
புலன்கிழவிபோல வறண்டுணர்வதெக்காலம். ௬

வாசியினூனேறி வலமிடந்தான் றிருப்பாமற்
றேசிங்டைபோல இடைப்படுவதெக்காலம். ௭

தேசிங்டைபோலத் தியங்காச்சுழிமுனையை
நாசிநுனியிலதை நான்மறிப்பதெக்காலம். ௮

நாசிநுனிகடந்து நாசமாய்ப்போகாமல்
வாசியுமென்கையில் வசப்படுவதெக்காலம். ௯

மையலெனுமாலை மார்புநிறையப்பூண்ட
தையலர்களெல்லாமென் றாயாவதெக்காலம். ௰

கஞ்சாவபினார்களுக்குக் கற்பமெனவுண்ணுமல
எண்சாண்பனங்கள் இறக்கியுண்பதெக்காலம். ௧௧

பொய்யேமிகுத்த புதர்ப்பாவிப்பையல்யான்
ஜீயோவென்றேயழுதுன் னடிபணிவதெக்காலம். ௧௨

கூயோகூவென்ன வலறவயுண்டவென்றன்
பொய்யானமெய்யின் பிழையறுவதெக்காலம். ௧௩

மருவுதகைமறந்து மனமுமதமிறந்து
இருகையுமேந்தி யிரந்துண்பதெக்காலம். ௧௪

இருகையுமேந்தி யிரந்துகுடித்தேநான்
சிறுகாயுலர்ந்து சலிப்பறுவதெக்காலம். ௧௫

ஆசனமறகாலே யணைந்திருந்துமோர்ந்துலகம்
நூசாடிப்பேசி யுணாவருளவதெக்காலம். ௧௬

வாசிவாவென்று வருந்தெள்ளமுதமுண்டு
பேசினான்வாழ்ந்தே பிழைதீரவதெக்காலம். ௧௭

எக்காலக்கண்ணி முற்றிற்று-ஆகபாடல்-௭௮ம்.

—(*)—

கண்மணிமாலைக்கண்ணி.



அத்துவிதமே யரிவகண்டதாகாரக்
கர்த்தவியமேயென் கண்ணேபராபரமே.

தற்பரமேசிற்பரமே தானென்றுநின்றுதவுங்
கற்பகமேயற்புதமே கண்ணேபராபரமே.

உடலேயுயிரா யுளங்குளிர்ந்தசெந்தேனே
கடலேநிறைபமுதே கண்ணேபராபரமே.

கொட்டிவைத்தமுத்தே குவிந்தநவரத்தினமே
கட்டிப்பசும்பொன்னேயென் கண்ணேபராபரமே.

சட்டரசவர்க்கமே சார்ந்தோர்க்குச்சந்தனமே
கட்டழகுபெண்ணேயென் கண்ணேபராபரமே. ௫

செல்வப்பெருக்கே திரண்டமணிப்பொக்கிஷமே
கல்விக்களஞ்சியமே கண்ணேபராபரமே. ௬

இன்னமுதேகற்கண்டே யெனக்கேற்றமுக்கனியே
கன்னலருமபாகேயென் கண்ணேபராபரமே. ௭

பிச்சாக்கிரண்டமுதே பிரியாப்பெருவாழ்வே
காய்ச்சாதசெம்பொன்னேயென் கண்ணேபராபரமே. ௮

நற்பவளக்கொம்பே நவின்றமணிப்பட்டகமே
கைப்பொருட்குமெய்ப்பொருளே கண்ணேபராபரமே. ௯

பட்டைக்கருப்புவட்டே பானேகொண்டசர்க்கரையே
கட்டிக்கரும்பேயென் கண்ணேபராபரமே. ௰

துன்பக்கடலைத் தொலைதகோர்நிகைதீர்க்குங்
கமபமற்றபாற்கடலே கண்ணேபராபரமே. ௧௧

பொய்ப்பொருளகளெல்லாம் புறக்கணித்தபுண்ணியர்தங்
கைப்பொருளசிதமேயென் கண்ணேபராபரமே. ௧௨

பவக்கடலை நீககிப் பரிவாய்க்கரையேற்றுங்
கவிழாமரககலமே கண்ணேபராபரமே. ௧௩

தம்பங்கொண்டோ தரித்துநின்றவோங்காரங்
கம்பத்தடியானேனென் கண்ணேபராபரமே. ௧௪

மலிகாதல்கொண்டகையனன் மண்ணிற்கவிப்பதற்கோ
கலகம்விளைத்துவிட்டாய் கண்ணேபராபரமே. ௧௫

தெள்ளியவான்சோதி தெளிந்துமெல்லவந்தையுங்
கள்ளப்படுத்திவிட்டாய் கண்ணேபராபரமே. ௧௬

புண்ணீரொழுகிப் புழுங்குமனத்தினர்போற்
கண்ணீகலங்கவிட்டாய் கண்ணேபராபரமே. ௧௭

பித்தர்கள்போலும் பிதற்றிக்காகம்போலுங்
கத்திகத்திசாகவிட்டாய் கண்ணேபராபரமே. ௧௮

போற்றுமறச்சிந்தை பொருதுசமர்க்காமற்
காற்றுயபபறக்கவிட்டாய் கண்ணேபராபரமே. ௧௯

நெற்பிதர்கடகேபொப்பாக நிற்பதற்கோவென்றலையிற்
கற்பித்துவிட்டுவிட்டாய் கண்ணேபராபரமே. ௨௰

சொல்லாச்சுயஞ்சோதிச் சுடர்கொழித்தநெஞ்சுகருங்
கல்லாகச்செய்துவிட்டாய் கண்ணேபராபரமே. ௨௧

வீழ்ந்தவிந்துசிந்தையுன்மீ தாசைவைத்ததனையுங்
கவிழ்த்துப்பாழாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே. ௨௨

ஓசைமணிமண்டபத்தி னுட்புகாவண்ணமெனைக்
காசினிபிரபஞ்சப்புவிட்டாய் கண்ணேபராபரமே ௨௩

வீண்காதநகசலலால வேறறிவினை நகண்ணுறுவ
காணகவரிநாகக்கிவிட்டாய் கண்ணேபராபரமே. ௨௪

சேததுமதசிவேபோலென [illegible]
காட்டிமறைந்துவிட்டாய் கண்ணேபராபரமே ௨௫

[illegible]
கட்டைவிறகாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே ௨௬

வேட் விரியாகாம வெ[illegible]
காலமாறவிட்டுவிட்டாய் கண்ணேபராபரமே ௨௭

வீடுகாமெனறு வி[illegible]
சாம்பவீட்டாய் கண்ணேபராபரமே. ௨௮

ஓடாமலோடி [illegible]
கூடோடவாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே ௨௯

ஈயோரையாறு [illegible]
காடுபநசெய்துவிட்டாய் கண்ணேபராபரமே ௩௰

அ[illegible]
சர்க்குணைபாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே ௩௧

வில்லாமமறு [illegible]
கலலாமாக்கிவிட்டாய் கண்ணேபராபரமே. ௩௨

மணையறு[illegible]
சணணிய[illegible] கண்ணேபராபரமே ௩௩

ஒரா[illegible] யானையிரடுமைக
கணடவைக்க நீயருளாய் கண்ணேபராபரமே ௩௪

ஏ— வெடிமுரவொணுறு [illegible]
கா[illegible]தருளாய் கண்ணேபராபரமே ௩௫

மைசிவிடிபோது மண[illegible]பெணபோது
[illegible] கண்ணேபராபரமே. ௩௬

நிறிராச யாறு [illegible]
சநி[illegible]தருளாய் கண்ணேபராபரமே ௩௭

நாசவிதாலினை [illegible]
சாதிலுனைக்கருளாய் கண்ணேபராபரமே. ௩௮

மாதவசியாகி மவ முறைமுயிற கவனமேற
காதலொன்று தந்தருளாய் கண்ணேபராபரமே ௩௯

நிறகுணமனைதகசொண்டு ருவிநாபய ஞசாதிக்கக
கறகுணமனைததீரததருளெனை கண்ணேபராபரமே. ௪௰

ஜென்மந்தொலைத்தடிமை சின்மயமாய்நின்றவுடன்
கன்மந்தொலைத்தருளாய் கண்ணேபராபரமே. ௪௧

சிந்தியொளிபரப்பிச் சிதறுநவசண்டாயோ
கந்தனையுந்தந்தருளாய் கண்ணேபராபரமே. ௪௨

அஷ்டாங்கயோகமதி லாசையுறவேயெனது
கட்டைவெட்டுமுன்னருளாய் கண்ணேபராபரமே. ௪௩

விற்புருவத்தூடு விளங்குமொளிபந்தாடக்
கற்பித்தளித்தருளாயென் கண்ணேபராபரமே. ௪௪

ஒப்பிலருளாழி யோடவிடுயேற்குமொரு
கப்பலாயவந்தருளாய் கண்ணேபராபரமே. ௪௫

உனையாள்வோமென்றடிமை யுள்ளங்குளிர்ந்திடநின்
கனிவாயதிறந்தருளாய் கண்ணேபராபரமே. ௪௬

பொய்கோத்தமெய்யதனைப் போட்டுவிடுமுன்னமெனைக்
கைகோர்த்ததனைத்தருளாய கண்ணேபராபரமே. ௪௭

வாய்ச்சதனக்கென்று மகிட்சிகொண்டுநின்றிடநின்
காட்சியளித்தருளாய் கண்ணேபராபரமே. ௪௮

மலைக்குமலைதிரிந்து மனுவாகவேமுழனைச
கலகந்தவிர்த்தருளாய் கண்ணேபராபரமே. ௪௯

நாணமடவார நன்கைதழுவக்கனவுங்
காணுதுகாத்தருளாய் கண்ணேபராபரமே. ௫௰

தொண்டரிடஞ்சென்றிடவுந் தொண்டுசெய்துநின்றிடவுங்
கண்டித்துவைத்தருளாய் கண்ணேபராபரமே. ௫௧

மூலவர்க்கமாக முழுமதிபாலுங்கொடுத்து
காலபயந்தீர்த்தருளாய கண்ணேபராபரமே. ௫௨

சோமருலெடுத்த சுவரியாமம்பாது
காத்துமுகமபார்த்தருளாய கண்ணேபராபரமே. ௫௩

மூலகனன்மூட்டி மூட்டியிவள்காலனையுங்
காலாலுதைத்தருளாய கண்ணேபராபரமே. ௫௪

சிட்டனெனவுமபூசை செய்தேனுமிப்பாவிக
கட்டைகடந்தேறவைத்தாள் கண்ணேபராபரமே. ௫௫

எட்டுமோரெட்டையு மெட்டெட்டுககயிறதனாற்
கட்டவுநல்லிஷ்டமவைத்தாள் கண்ணேபராபரமே ௫௬

ஆதாரமாறுமடுக கடுககாகக்கடத்திக
காதுககுமேலேறிவைத்தாள கண்ணேபராபரமே. ௫௭

தமபிததுயேசித்துட் கொள்ளும்படிககுதவிக
கமபமுனைநாட்டிவைத்தாள் கண்ணேபராபரமே. ௫௮

பட்டிப்பசும்பாலை பக்குவத்துடன்காலைக்
கட்டிக்கறந்தடித்தாள் கண்ணேபராபரமே. ௫௯

நில்லாவுடற்கு னிலைபக்கொடுக்குமொரு
கல்லாவின்பாலளித்தாள் கண்ணேபராபரமே. ௬௰

சோமப்பாலூட்டிச் சுரந்தவாமப்பாலுங்
காமப்பாலுங்கொடுத்தாள் கண்ணேபராபரமே. ௬௧

மண்டைநடுமண்டலத்துண் மண்டிபழுதுண்டிட்டவங்
கண்டங்கடத்திவைத்தாள் கண்ணேபராபரமே. ௬௨

மூலாதாரத்துண் மூலைகொண்டுயாங்கெழுந்த
காலாற்கனலெரித்தாள் கண்ணேபராபரமே. ௬௩

ஆயுங்கலையிரண்டு மாயாதடக்கியென்றன்
காயநிலைக்கவைத்தாள் கண்ணேபராபரமே. ௬௪

அற்பவுடலா யிருந்தவமேபுரிந்திடவுங்
கற்பமுறைகைக்களித்தாள் கண்ணேபராபரமே. ௬௫

அண்டபிண்டமென்றுநின் றுடுந்திருக்கூத்தை
கண்டுகளிகூறவைத்தாள் கண்ணேபராபரமே. ௬௬

எண்ணுதவெண்ணமெல்லா மெண்ணுமெலென்றன்மனக்
கண்ணுடிக்களளளித்தாள் கண்ணேபராபரமே. ௬௭

எவ்வுலகுந்தானு யிருந்தவுனையாவிருமுவுங்
கவ்வுமலக்கட்டறுத்தாள் கண்ணேபராபரமே. ௬௮

அற்பவுடல மருத்திடுமுன் றீபமிட்ட
கர்ப்பூரமாகவைத்தாள் கண்ணேபராபரமே. ௬௯

விலங்கினங்களோடே வீற்றிடவுமேழைநெஞ்சே
கலங்காதவண்ணம்வைத்தாள் கண்ணேபராபரமே. ௭௰

அடுத்துக்கெடுக்கு மரிவையாகளாகாமற்
கடக்ககடத்திவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௧

நாற்றந்தொலைய நறவுணையுநாரியர்தங்
காற்றும்படாதுவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௨

ஆணிப்பொன்மேரு வாமுனையுமுன்னடிமை
காணுங்கருணைவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௩

வனவாசமேக வறமளித்துன்பொற்பதத்தைக
கனமாயிரஞ்சவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௪

எட்டிப்பிடித்தாலு மெட்டாதுனின்றவுனக
கட்டிப்பிடிக்கவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௫

மதபேதமோதி மறைக்குமறைசொல்வதெல்லாங்
கதையாய்மடிக்கவைத்தாள் கண்ணேபராபரமே. ௭௬

அண்டபிண்டமாயுமதற் கப்பாலுநின்றவெளி
கண்டவுனைக்காட்டிவைத்தாய் கண்ணேபராபரமே. ௭௭

உலையிலிடுமெழுகா யுள்ளுடைய னந்துருகிக்
கலங்கிப்பதறுகாலமெப்போ கண்ணேபராபரமே. ௭௮

வெம்பியழக்கொண்டேன் மெய்யிற்றுயிலென் கண்ணிரும்
கடலலையுங்கண்டிலையோ கண்ணேபராபரமே. ௭௯

மெத்தமயலுற்று விருப்பமொடு பஞ்சாறுங்
கற்றும்பாழாக்கிவிட்டேன் கண்ணேபராபரமே. ௮௰

பாலங்கடந்துபெரும் பாதைநடு வாமலும்வினை
சாலங்கடந்துவிட்டேன் கண்ணேபராபரமே. ௮௧

பூக்கமலமொடுத்துன் பொன்னடியை யாறுமென்றுங்
காத்திருந்துபூசைசெய்வேன் கண்ணேபராபரமே. ௮௨

விண்கொண்டுநின்று விளங்குமுனையெக்காலம்
கண்கொண்டுகண்டேன் கண்ணேபராபரமே. ௮௩

ஐயோவென்செய்வே னுருமாறாவினைப்பே
கையைவிடலாமோவென் கண்ணேபராபரமே. ௮௪

நட்டநடுவீதியென்று நானிருந்திருந்துனையுங்
கட்டிநதழுமேனோ கண்ணேபராபரமே. ௮௫

அல்லும்பகலு மறவேன்படுந்துயராற்
கலங்குங்கனாநிலைமென் கண்ணேபராபரமே. ௮௬

பொன்னைப்புதைத்துவைத்துப் போனவர்போற் றேடுகின்ற
என்னாருயிருநிறைகாண் கண்ணேபராபரமே. ௮௭

பணத்தைப்பணமென் றுவம பார்த்ததுண்டோவென்மனத்திகண்
கணக்குத்தெரியாதோ கண்ணேபராபரமே. ௮௮

நிற்கும்பொழுதானா லெழுந்தாலும் பக்கம்
கைக்குருசொல்வதுண்டோ கண்ணேபராபரமே. ௮௯

தனையிலுலகனைத்துந் தானிருந்தீமோரு
கடுகிடையுமாறோவென் கண்ணேபராபரமே. ௯௰

உனக்குமெனைமறந்தோ ருள்ளக்கருத்திலுண்மாங்
கனிக்குளுறுவண்டாறோ கண்ணேபராபரமே. ௯௧

நெக்குருகிநின்றநிலை தோன்றுதலிலகுணத்தா
கைக்குட்பட்டாடிநின்றாய் கண்ணேபராபரமே. ௯௨

பத்திதமனம்வாழி பரமாத்தமும்வாழி
சத்திதனிலைவாழி கண்ணேபராபரமே. ௯௩

அத்துவிதமொழி யறிவையகண்டதுவ்வாழி
சித்தமனேநீவாழி கண்ணேபராபரமே. ௯௪

தற்பரமேவாழி தாராதுதக்கநூவுங்
கற்பகமேவாழியென் கண்ணேபராபரமே. ௧௫

சிற்பரமேவாழி சிவயோகிபர்வாழி
கற்பனையெல்லாம்வாழி கண்ணேபராபரமே. ௧௬

நற்பதவியும்வாழி நவின்மறைவாழி
கற்பதாரிகளவாழி கண்ணேபராபரமே. ௧௭

சித்தர்சனம்வாழி சின்மயநாதாவாழி
கர்ததவிபம்வாழியென் கண்ணேபராபரமே. ௧௮

மாதவத்தோருமவாழி மௌனமுதநிலையுமவாழி
காதலித்தோருமவாழி கண்ணேபராபரமே. ௧௯

குவலயத்தோருமவாழி குணமகுரியாருமவாழி
கவலையமற்றோருமவாழி கண்ணேபராபரமே. ௨௰

கண்மணிமாலைக்கண்ணி முற்றிற்று ஆக-பாடல் அ௪௰.

மனோன்மணிக்கண்ணி.

மெய்தொழுதுமேலுமேலுமெதிகேஸ்வரனை
கைதொழுவுங்கனவு கண்டேனடிமனோன்மணியே. ௧

கொப்பாகவுமுமையான் கோகன் மாடிப்பாடவுநீ
காப்பாகவுங்கனவு கண்டேனடிமனோன்மணியே. ௨

பெண்ணைவிர்த்தபோந்துமையான் பிரிமையம்பணரக
கண்களுநங்காகக்கனவு கண்டேன்மனோன்மணியே. ௩

மலர்ந்திருக்குமபொற் கமல மணவனையின் ருவருங்கை
கலந்திருக்கவுங்கனவு கண்டேன்மனோன்மணியே. ௪

மெய்மஞ்சட்குளிப்புங்கண வீழிபபுமெகககளிபபுமெனக்
கைபிஞ்சவுங்கனவு கண்டேன் மனோன்மணியே. ௫

மைதீட்டவுங்கயற்கண் மலரின்மலாமுலையிற
கைபூட்டவுங்கனவு கண்டேன்மனோன்மணியே. ௬

மெய்தழுவவுமயிருவர் மெய்யோடுமெய்யொருங்காக
கைதழுவவுங்கனவு கண்டேன்மனோன்மணியே. ௭

காமப்பாலைபபெருக மறுவாவிபம்வருகக
காமப்பாலுணணககனவு கண்டேனடிமனோன்மணியே. ௮

பாலனாகவுங்காணற பாலுணவுமென்னைவிட்டுக்
காலனேகவுங்கனவு கண்டேன்மனோன்மணியே.

வடியாவருளமிர்தம் வடியாவடிக்குணங்
குடியரொடுகனவிற் குடித்தேன்மனோன்மணியே. ௰
கோடிபெருமதிகள் கூடுமொருமதிபோல்
வாழ்பேன்மானேபெம் மானேமனோன்மணியே. கக
கண்ணேயென்கண்மணியே கண்குளிர்ந்தகட்டழகுப்
பெண்ணேயமிர்தப் பிழப்பேமனோன்மணியே. கஉ
பெண்ணேமயிலினமே போனமேயென்றுனேபென்
கண்ணிற்கிடைக்கக் காண்பேன்மனோன்மணியே. கங
வன்னவுடைக்கழுன்றன் வாலவநதினுக்கும்
அன்னநடக்குமென்ற னாசைமனோன்மணியே கச
கூந்தலிலங்கக் குருமைபைத்தனங்குலுங்க
நேர்ந்துநடம்புரிந்து நிற்பாய்மனோன்மணியே. கரு
துவளுந்துடையிடையுந் தோகைமயினடையும்
பவளயிதழுமென்று பார்ப்பேன்மனோன்மணியே. கசு
மலர்மாலைகள்கிடந்து மார்பிறபின்னலாடுமுன்றன்
அலர்முலையும்யானென் றணைவேன்மனோன்மணியே. கள
வெய்யிற்பட்டாலும் வெதும்புமுடலாவுனது
மெய்யிற்றொட்டாலுங்காதம் வீசும்மனோன்மணியே. கஅ
காற்றுப்பட்டாலுங் கலங்குமென்றன்மேனியுநீ
பார்த்துத்தொடவின்பப் படைப்பேன்மனோன்மணியே. கக
பிடியாரைப்போலும் பிடிப்பேன்முலையைக்குணங்
குடியாரைப்போலுங் குடிப்பேன்மனோன்மணியே. உ௰
கூந்தலுக்குநெய்தோய்த்துக் குளிர்மஞ்சணீராட்டி
வார்ந்துசிங்காரித்து வைப்பேன்மனோன்மணியே. உக
காலிற்பனிநீர்விட்டுக் கழுவிமடிமீதுவைப்பேன்
மேலிலத்தரும்பூசி விடுவேன்மனோன்மணியே. உஉ
காதம்பரிமளிக்குங் கஸ்தூரிப்பொட்டிடுவேன்
போதுஞ்சவ்வாதணிந்து புணர்வேன்மனோன்மணியே. உங
தலைக்குமினுக்கெண்ணெய் தடவிச்சடைபின்னிவைப்பேன்
முலைக்குவன்னக்கச்சிறுக்கி முடிப்பேன்மனோன்மணியே. உச
கட்டாடைவர்க்கமெல்லாங் கண்டுகளித்துயர்ந்த
பட்டாடைவர்க்கம்வைத்துப் படைப்பேன்மனோன்மணியே. உரு
மூக்குக்குத்திகாதுகுத்தி முழுவயிரந்தூக்கிவைப்பேன்
மோகசுமுத்துந்தூககுமுத்துங் குவிப்பேன்மனோன்மணியே. உசு
கைக்கஞ்சுரிகடகங் கல்லுமிழைத்துக்கொடுப்பேன்
மெய்க்குழற்குசடைப்பில்லை முடிப்பேன்மனோன்மணியே. உள

தங்கக்கொலுசுஞ்சிலம்புத் தண்டைரத்நபாடகமும்
கொங்கைக்குமோகனமாலை கொடுப்பேன்மனோன்மணியே. உஅ

காலாழிபீலிமுதற் கன்னகையும்பொன்னகையும்
நாலாட்சுமைவேண்டி னடக்குமனோன்மணியே. உகூ

முடிமீதினுமகுட முடிசூட்டுவேநற்குணங்
குடிமாதவர்க்ள்குலக் கொழுந்தேமனோன்மணியே. ஙய

சந்நிதானத்திற் சரணஞ்சரணமென்று
சொன்னமலர்தூவித் தொழுவேன்மனோன்மணியே. ஙக

கற்பூரமேற்றிக் கரத்தீபவாலாத்தி
எப்பொருமபோற்ற வெடுப்பேன்மனோன்மணியே. ஙஉ

முக்காலமும்பூசை முடிப்பேன்முக்காலமல்லால்
ஏககாலமும்பொங்க லிடுவேன்மனோன்மணியே. ஙங

சாதந்தளிகைச்சமைத்துச் சாம்பிராணிதூபமிட்டுப்
பாதந்தொழுதிட்டுப் படைப்பேன்மனோன்மணியே. ஙச

பச்சைப்பருப்புமுதற பருப்பிறபத்துவகைகடைவேன்
வச்சநறுநெய்யுருக்கி வளர்ப்பேன்மனோன்மணியே. ஙரு

முட்டைப்பொரிப்பேன் முழுக்கோழியும்பொரிப்பேன்
நட்டைபயிங்காணிற் றருவேன்மனோன்மணியே. ஙசா

ஆட்டுக்கறியுங்கொள்வே னதிலனந்தம்வகைசமைப்பேன்
கூட்டுக்கறியும்பண்ணிக் கொடுப்பேன்மனோன்மணியே. ஙஎ

குட்டிக்கறிதானுங் குழம்புபண்ணித்தாளித்தோர
சட்டிக்கறியேனுந் தருவேன்மனோன்மணியே. ஙஅ

பால்பழமுந்தேனும் பலகாரவர்க்கங்களும்
மேலுமேலும்பரப்பி விடுவேன்மனோன்மணியே. ஙகூ

அடிக்காயிரம்பொன்விலை யானாலுமீந்துகுணங்
குடிக்குண்மாளிகைகட்டிக் கொடுப்பேன்மனோன்மணியே. சய

ஆணிப்பொன்மதிலுயர்ந்த வாண்மனையுந்தீப்பாக
மாணிக்கமேவிளக்காய் வைப்பேன்மனோன்மணியே. சக

துலங்குமணிமண்டபமுஞ் சொர்க்கமெனவுமிலங்கா
நிலங்குமலங்காரஞ்செய் திடுவேன்மனோன்மணியே. சஉ

ரத்தினங்கள்வைத்திழைத் திராவைப்பகலாக்குஞ்
சித்திரங்கள்வகைவகையாய்ச் செய்வேன்மனோன்மணியே. சங

பண்ணும்பழுந்தாமல் மனமேமுழுவதினுங்
கண்ணாடியாயிருக்கக் காண்பேன்மனோன்மணியே. சச

மங்காதொளிபரப்பும் மௌனமன்றியாலுமொரு
சிங்காசனமேடை செய்வேன்மனோன்மணியே.

[illegible] சர்கிபு அவர்கள்பாடல்.

[illegible] பவ்ளவரகன்க்ஈன்
[illegible] பேண் [illegible] மணியே.

[illegible] கள்செய் [illegible]
[illegible] ப்பே [illegible] மணியே.

[illegible] போற்றிப் [illegible]
[illegible] வாழ்வாய [illegible] மணியே

[illegible] கர்த் [illegible]
[illegible] மணியே.

[illegible] முவு [illegible]
[illegible] மணியே

[illegible] மலையாய்த் தொனை [illegible]
[illegible] மணியே.

போததனம் குவி [illegible]
பாததஜினும் [illegible]

இடையாமபொருள [illegible]
படையாபபொரு [illegible] மணியே

தாமரைமுக [illegible]
சேனைமுக [illegible] மணியே

முத்தாக்குமண [illegible]
பழகாககுமவா [illegible] மணியே

